No:56:09 Price: Rs.10.00

Herald of Deliverance
விடுதலைத் தூதன்

"Speak evil of no man" - Titus3:2 " Follow peace with all men"-Hebrews12:14

SEPTEMBER 2012

நம்முடைய தேவன் நம்மை வழிநடத்துவார்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஆசிரியர் உரை...

அன்பான தூதன் வாசகர்களுக்கு,

எனது இதயங்கனிந்த அன்பின் வாழ்த்துதல்கள்.

"மரணவாசல்களிலிருந்து என்னைத் தூக்கிவிடுகிற கர்த்தாவே ,..." (சங்கீதம் 9:13) என்று சங்கீதக்காரன் தேவனுக்கோர் பெயர் சூட்டி அழைக்கிறார். ஆம், மெய்யாகவே நான் மரணவாசல்களுக்கு வெகு சமீபத்தில் சென்றேன். "தூக்கிவிடுகிற கர்த்தர்" என்னைத் தமது கிருபையால் தூக்கி எடுத்து, தம்முடைய நன்மைகளை நான் சாட்சியாகச் சொல்லும்படி என்னை உயிரோடே காத்தார். காரணம், உங்கள் அனைவரின் ஊக்கமான ஜெபமே. உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"... என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" (2 கொரிந்தியர் 12:9) என்றுள்ள வேத வசனத்தின்படி, அனுதினமும் நான் அவரது பெலத்தை எனது சரீரத்தில் உணர்ந்து வருகிறேன்.

"...கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்.

"... நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ... கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்" (2 கொரிந்தியர் 12:9,10) என்றார் பவுலடியார்.

ஆம், பவுல் அப்போஸ்தலனுடைய அநுபவங்களை நானும் எனது அநுபவங்களாக இக்காலங்களில் உணர்ந்துவருகிறேன். இது எனக்குக் கிடைத்த பாக்கியமும் சிலாக்கியமுமே ஆகும்.

நான் உங்களை நேரிடையாகப் பார்க்கமுடியாவிடினும், சபை மக்களுக்காகவும் ஊழியர்களுக்காகவும் எப்போதும் ஜெபித்துவருகிறேன். சீக்கிரத்தில் முற்றும் சுகமடைந்து வந்து, நான் உங்களைக் காண்பேன் என்று விசுவாசிக்கிறேன். எனக்கு வேண்டிய கிருபைகளுக்காகத் தொடர்ந்து ஸ்தோத்திரிப்பீர்களாக.

"... நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்" (பிலிப்பியர் 4:11) என்றுள்ள அநுபவம் நமக்குள் காணப்படவேண்டியது அவசியம். ஆகவே சபையில் எனது இடம் வெற்றிடமாகக் காணப்படுவதுகுறித்து நீங்கள் வருந்தாமல் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள். **"ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்"** (1 பேதுரு 4:8).

சபை ஆராதனைகளை நடத்துவது மனிதனல்ல, பரிசுத்த ஆவியானவர் அல்லவா! ஆகவே, அவரது பிரசன்னத்தில் நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள் என்பதை நன்கு உணருவீர்களாயின், கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்கமுடியும். மனிதர்மேல் உங்களது கண்களையும் இருதயத்தையும் பதியாதிருப்பீர்களாக. **"கடைசியாக, சகோதரரே, சந்தோஷமாயிருங்கள், நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள்; ஏக சிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள், அப்பொழுது ... தேவன் உங்களோடேகூட இருப்பார்"** (2 கொரிந்தியர் 13:11). இவ்வசனத்தை நீங்கள் அனைவரும் கைக்கொண்டு நடந்து, என் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள் என்று நம்புகிறேன்.

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதித்து, தம்முடைய சித்தத்தின்படி வழிநடத்திக் கொள்ளுவாராக. ஆமென்.

அன்புள்ள

R. K. Sam

நம்முடைய தேவன் நம்மை வழிநடத்துவார்

போதகர் எம்.கே.சாம் சுந்தரம்

உலகின் பல தேசங்களிலும், ஏன், தியாவிலும் மக்கள் அவரவருக்குரிய ய்வங்கள் என்றழைக்கப்படும் தேவதை ள வழிபட்டுவருகின்றனர். இந்துக்கள் பத்து முக்கோடி தெய்வங்களை வழிபடு ன்றனர். ஆனால், இயேசு கிறிஸ்து ஒருவர் டுமே உலகின் மக்களுக்காகப் பாவநிவிர்த்தி ய்ய அவதரித்தார். எனவே, அவர் மட்டுமே ண்மைத் தெய்வம் ஆவார். அவரை மட்டுமே ம், "நம்முடைய தேவன்" என்றழைப்பது புடையது.

"இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள காலங்களிலும் நம்முடைய தேவன்; ணபரியந்தம் நம்மை நடத்துவார்" (சங்கீதம் 14). நம்முடைய தேவன் இந்த ஆண்டின் றுதிவரை நம்மை நடத்துவார் என்று வேதம் றவில்லை. நம்முடைய தேவன் மரணபரியந் ம் நம்மை நடத்திச்செல்பவர் என்றுதான் வதம் கூறுகின்றது. நம்முடைய மரணமோ ன்றி, இயேசுவோ முன்னர் நம்மைச் சந்திக் லாம். நம்முடைய கடைசி மூச்சுவரை நமது வன் நம்மை நடத்த வல்லவராயிருக்கிறார்.

"அப்பொழுது யோசுவா சகல ஜனங் ளையும் நோக்கி: இஸ்ரவேலின் தேவனாகிய த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: வத்திலே உங்கள் பிதாக்களாகிய ஆபிரகா க்கும் நாகோருக்கும் தகப்பனான தேராகு பவன், நதிக்கு அப்புறத்திலே குடியிருந்த து அவர்கள் வேறே தேவர்களைச் வித்தார்கள்" (யோசுவா 24:2). தேராகும், ன் குமாரனான ஆபிரகாமும் முதலில் க்கு அப்பாலிருந்த தங்கள் குல தெய்வங் ன வேறே தேவர்களைத்தான் சேவித்து த்தனர். ஆனால், நம்முடைய தேவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுக்குத் தம்மை வெளிப்படுத்தினபடியால், அவர்கள் உண்மைத் தெய்வமான கர்த்தரைச் சேவிக்க முற்பட்டனர்.

அதனால்தான் சங்கீதக்காரனான தாவீது, *"கர்த்தரையல்லாமல் தேவன் யார்? நம்முடைய தேவனையன்றிக் கன்மலையும் யார்?"* (சங்கீதம் 18:31) என்றான். பரிசுத்த வேதாகமம் நம்முடைய தேவனைத்தான் உண்மைத் தெய்வம் என்று கூறுகின்றது.

நம்முடைய தேவன் நமக்காக என்னென்ன காரியங்களைச் செய்கிறார்? கீழே காண்போமா? அவர் நம்மை மீட்டெடுப்பவர்; நம்மேல் மனதுருகுகிறவர்; நம்மை இரட்சிப்பவர்; நமக்காக யுத்தஞ்செய்பவர்; பட்சிக்கிற அக்கினியாயிருப்பவர்.

நம்மை மீட்டெடுத்து நடத்தும் நம்முடைய தேவன்

"நம்மையும் நம்முடைய பிதாக்களையும் அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணி, நம்முடைய கண்களுக்கு முன்பாகப் பெரிய அடையாளங்களைச் செய்து, நாம் நடந்த எல்லா வழியிலும், நாம் கடந்து வந்த எல்லா ஜனங்களுக்குள்ளும் நம்மைக் காப்பாற்றினவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர்தாமே. தேசத்திலே குடியிருந்த எமோரியர் முதலான சகல ஜனங்களையும் கர்த்தர் நமக்கு முன்பாகத் துரத்தினாரே; ஆகையால் நாங்களும் கர்த்தரைச் சேவிப்போம், அவரே நம்முடைய தேவன் என்றார்கள்" (யோசுவா 24:17,18).

ஜனங்கள் தேவனை, "நம்முடைய தேவன்" என்றழைத்தனர். யோசுவா இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி, எதற்காக இந்தத் தேவனைச் சேவிக்கவேண்டும் என்ற

விளக்கத்தை அவர்களுக்குத் தெளிவுபடுத்தினான். அவர் இஸ்ரவேலரை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணினார். அவர்களது முற்பிதாக்கள் எல்லோரும் நானூற்று முப்பது ஆண்டுகள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்தனர்.

தேவன் தமது பலத்த கரத்தையும் ஓங்கிய புயத்தையும் காண்பித்து, அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் தமது மீட்பின் பணியைச் செய்துமுடித்தார். அது அவர்களுக்குப் பஸ்கா பண்டிகையின் நாளாக இருந்தது. அவர்களைச் செங்கடலைக் கடக்கச் செய்து, வனாந்தரத்திலே நாற்பது ஆண்டுகள் நடத்தினார். வனாந்தரத்தில் எவ்விதம் ஆகாரம் கிடைத்திருக்கும்? புருஷர்கள் மட்டுமே ஆறுலட்சம்பேர். பெண்களும் அவர்களது குமாரர், குமாரத்திகளும் சேர்ந்தால் எத்தனை இலட்சம்பேராய் இருந்திருப்பர்!

அத்துணைபேருக்கும் வனாந்தரத்தில் தாகம் தீர்க்க, தேவையான தண்ணீர் முதற்கண் இருந்ததில்லை. இப்போது நாம் வாழும் சிங்காரச் சென்னைபோல் அவ்வனாந்தரம் இருந்திருக்கக் கூடுமோ? இருளில், திசையறிவது கடினமாயிருந்திருக்கலாம். எவ்வழியில் செல்வது என்பதை அவர்கள் அறியாதிருந்திருக்கலாம். தங்குவதற்கு அவர்களுக்கு வீடு இருந்ததில்லை.

தேவன் தமது மேகஸ்தம்பத்தினாலும், அக்கினிஸ்தம்பத்தினாலும் அவர்களை வழி நடத்தினார். உணவளித்தார், இறைச்சி தந்தார்.

எல்லா வசதிகளோடு வாழும் நாம், அவர்களது வசதியற்ற நிலையைக் கற்பனை செய்துபார்க்கவேண்டும். செங்கடலைக் கடந்து, கானான் தேசத்துக்குள் பிரவேசிக்க நாற்பது ஆண்டுகளாகச் சுற்றித்திரிந்தனர். வழியில் அவர்கள் சந்தித்த அத்தேசத்துக் குடிகளாகிய எமோரியர் முதலான சகல ஜனங்களையும் துரத்தினார் கர்த்தர்.

தாங்கள் நடந்த வழிகளிலெல்லாம்

கர்த்தர் காப்பாற்றினதை இஸ்ரவேலரு
சுட்டிக்காட்டினான் யோசுவா. அதனால்
''நானும் என் வீட்டாரும் கர்த்தரையே சே
போம்'' என்றான். இஸ்ரவேலரும், ''அ
நம்முடைய தேவன்'' என்று ஏற்று வழிபட்

இரண்டாயிரம் ஆண்டுகட்டு
வாழ்ந்த இஸ்ரவேலர் கர்த்தரைத் த
தெய்வமாக ஏற்றுச் சொந்தமாக்கிக்கொண்
அவர்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியின் இர
தினால் எகிப்தின் அடிமைத்தனத்திலிரு
மீட்டெடுக்கப்பட்டனர்.

நாமோ இயேசு கிறிஸ்துவின்
இரத்தத்தினாலே நமது பாவங்களற கழு
பட்டுள்ளோம். இயேசு கிறிஸ்துவின்
இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்
சுத்திகரிக்க வல்லமையுடையதன்றோ?

பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்
தினால் கழுவப்பட்ட இஸ்ரவேலர் தண்ணீ
மூழ்கியெடுக்கும் ஞானஸ்நானத்திற்கு ஒப்
செங்கடலைக் கடந்தனர்.

இன்று பாவமன்னிப்பின் நிச்சயத்
பெற்று. ஞானஸ்நானத்தைப் பெறாதவ
அடிமைத்தனத்திலிருந்து இன்னும் விடுத
யாகவில்லை என்பதை உணர்ந்துகொ
ளுங்கள். இன்னும் முழுமையாக இரட்சிக்கப்
வில்லை என்பதாகும்.

பவுல் அப்போஸ்தலன் கூறியு
"...கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவ
அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்
படுவீர்கள்" (அப்போஸ்தலர் 16:31) என்ற
வாக்கைப் பற்றிக்கொண்டு, ''நாங்கள் இ
கிறிஸ்துவை விசுவாசித்து; பாவமன்னிப்
இரட்சிப்பை—பெற்றுவிட்டோம் என்கின்
சிலர். இது முழுமையான இரட்சிப்பு அல்

அன்பானவர்களே! அடுத்துள்ள வச
களைக் கூர்ந்து நோக்குவீர்களாக. சிறை
காரிகள் இருவரையும் தன் வீட்டிற்கு அழை
சென்றான். அவர்கள் வசனங்களை விவ
கேட்டறிந்தார்கள். அன்றிரவே அ

...மக்கள் யாவரும் ஞானஸ்நானம் ...பெற்றவர்கள். ஆகவே, ஞானஸ்நானம் ... இன்னும் முழுமையான ...பெறவில்லை என்பதை அறிந்து ...கொள்ளவும்.

இந்த தேவன் என்றென்றுமுள்ள ...என்றும் நம்முடைய தேவன். அவர் ...வேலை நம்மிலே நடத்துகிறவர் ...அறிந்துகொள்ளுங்கள்.

மனதுருகும் நம்முடைய தேவன்

"கர்த்தர் கிருபையும் நீதியுமுள்ளவர்; நம்முடைய தேவன் மனஉருக்கமானவர்" (சங்கீதம் 116:5). இங்கு 'நம்முடைய தேவன்' ... குறிப்பிட்டுள்ளது காண்க. நம்முடைய தேவன் மனஉருக்கமுள்ளவர்.

...மனதுருக்கத்தோடு, பாசத்... நாம் அதே பாசத்தை அன்புடன் ... அவர்கள் நம்மீது காட்ட எதிர் ...அதில் அவர்கள் தவறும் போது, ...கிறோமல்லவா? ஆனால், நம் ...அப்படிப்பட்டவரன்று. அவர் நம்மீது ...எப்போதும் வைத்திருப்பவர்; "நீ ...சொந்தமானவன், சொந்தமானவன்" ...சொல்லுகிறவர்.

...புத்தகத்திலே இயேசு ...மனதுருகிச் செயல்பட்டதை அநேக ...காணலாம். மத்தேயு 20:30 முதல் ...வசனங்களை வாசித்தறியவும்.

பார்வையற்ற இருவர் இயேசுவின் ...காத்திருந்ததை இங்குக் ...கிறோம். "ஆண்டவரே, தாவீதின் ...எங்களுக்கு இரங்கும்" என்று ...மற்றவர்கள் அவர்களைப் ...அதட்டினபோதும், அவர்கள் ...அதிகமாய்க் கூப்பிட்டார்கள். ...அங்கு நின்றார். அவர்கள்மீது மனதுரு... ...அவர்களது கண்களைத் ... உடனே அவர்கள் பார்வையடைந்து, அவருக்குப்பின் சென்றனர் என்று வாசிக்கின்றோம்.

ஆம், அன்பானவர்களே! இதை வாசித்துக்கொண்டிருக்கும் வேளையிலே இயேசு உங்களைத் தொடுகிறார்; உங்களது சரீரத்தில் என்னென்ன பிரச்சினை இருந்தாலும் இப்போதே சுகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

வியாதியாயுள்ளவர்களைக் காணும் போதெல்லாம் இயேசு மனதுருகுகிறவர். எல்லா வியாதிகளையும் அவர் உடனுக்குடனே நீக்கினார். மாற்கு 1:41 இல் "*இயேசு மனதுருகி, கையை நீட்டி அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார்.*" நம்மில் யாராவது குஷ்டரோகிகளைத் தொட்டது உண்டா? தொடத்தான் முற்படுவோமா? இயேசுவோ மனதுருக்கம் கொண்டவர். அவர் சகலரையும் தொட்டுச் சுகமாக்குகிறவர்.

நாயீன் ஊர் விதவை தனது ஒரே மகனை இழந்து, அவனை அடக்கம் செய்யக் கொண்டுபோகும் வேளையிலே, இயேசு அந்த விதவையினுடைய கண்ணீரைக் கண்டார். "*வாலிபனே, எழுந்திரு*" என்று கூறி, அவனை உயிரோடு எழுப்பினார். ஆம், ஒரு பெண்ணுக்கு முதற்கண் அவளது கணவன் துணை. அவன் இறந்துபோனபின்பு, அவள் தன் மகன்மீது தான் தன் நம்பிக்கையை வைப்பாள். மனதுருக்கம் நிறைந்த இயேசு இதை நன்கு அறிந்திருந்தபடியால், அவ்விதவையின் மகனை உயிரோடு எழுப்பினார்.

"*அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி,*" (மத்தேயு 9:36) என்று வேதம் கூறுகின்றது.

அம்மக்களுக்கு ஒரு மேய்ப்பன் தேவை என்பதை இயேசு அறிந்திருந்தபடியால், அவர்கள்மீது மனதுருக்கங்கொண்டார். இன்று உலகமெங்கிலும் கோடிக்கணக்கான மேய்ப்

பர்கள் இருக்கின்றனர். நம்முடைய தேவன் மனதுருக்கம் நிறைந்தவரானபடியால் அநேக மேய்ப்பர்களை ஏற்படுத்தியுள்ளார். நம்முடைய அப்போஸ்தல கிறிஸ்தவ சபைக்குப் பல கிளைச் சபைகளைத் தந்து, அநேக மேய்ப்பர் களையும் தந்திருக்கிறார்.

ஆம், நம்முடைய தேவன் மனதுருக்கங் கொண்டவர். நோயுற்றோர் மேல் இரங்கு கிறவர். மேய்ப்பனில்லாத ஆடுகள்மேல் இரங்குகிறவர். மனிதரின் கண்ணீரைத் துடைக் கிறவர். இத்துணை மனதுருக்கம் நிறைந்த நம்முடைய தேவனுக்கு நன்றிகூறுவோம்.

இரட்சிப்பை அருளும் நம்முடைய தேவன்

"நம்முடைய தேவன் இரட்சிப்பை அருளும் தேவனாயிருக்கிறார்; ஆண்டவராகிய கர்த்தரால் மரணத்திற்கு நீங்கும் வழிகளுண்டு" (சங்கீதம் 68:20).

இங்கும், 'நம்முடைய தேவன்' என்ற சொல்லைக் காணவும். அன்பானவர்களே! இவ்வசனங்கள் அனைத்தும் வேதத்திலிருந்து எடுக்கப்பட்ட முத்துக்கள். எந்தப் புத்தகத்தி லிருந்தும் தேர்ந்து எடுக்கப்பட்ட சிறப்பு வசனங்கள் அல்ல. வேதத்தை நீங்கள் படிக்கும் போதே மிகுந்த தியானத்தோடே படிக்க வேண்டும். அப்போது முத்துக்கள் போன்ற வேத வசனங்களின் ஆழத்தை அறிந்துகொள்ள முடியும்.

'இரட்சிப்பு' என்ற சொல்லைக் கண்டதும் இது பாவமன்னிப்பைத்தான் பொருள்படுத்தும் என்றுமட்டும் எண்ணுவது சரியன்று. இது ஆபத்தினின்று விடுதலை பெறுவதையும் குறிக்கும்.

உலகில் தேவபிள்ளைகளாகிய நாம் பல விபத்துக்களினின்றும் தப்புவிக்கப்படு கிறோம். சாலை விபத்துக்கள், தொழிற்சாலை விபத்துக்கள், வான்வழிப்பயணம், கப்பற் பயணம் செய்யும்போது ஏற்படும் விபத்துக்களி னின்றும் தேவன் தம்முடைய பிள்ளைக விடுவிப்பது, இரட்சிப்பைப் பொருள்படு

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ எபிரெய புருஷர்கள் பாபிலோன் தேச இராஜாவால் ஏற்படுத்தப்பட்ட பொற்சிலை வணங்காததினால், எரிகிற அக்கி சூளையில் வீசப்பட்டனர்.

அவர்கள் கூறினது என்ன? *"... எங் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயி கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக் ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கல விடுவிப்பார்"* (தானியேல் 3:17) என்று இங்கு, 'எங்கள் தேவன்' என்பது 'நம்முடை தேவன்' என்று பொருள்படும். அவர் நம்பின நம்முடைய தேவன் அவர்க விடுவித்தார்.

"... இவ்விதமாய் இரட்சிக்கத்த தேவன் வேறொருவரும் இல்லையென் (தானியேல் 3:29) நேபுகாத்நேச்சார். இங் 'இரட்சிக்கத்தக்க' என்ற சொல் அக்கினி பேராபத்திலிருந்து விடுவித்த நம்முடை தேவனைத்தான் குறிப்பிடுகின்றது. ஆ நம்முடைய தேவனோடு நமக்கு நெருங் உறவு உண்டு.

யோனா, கர்த்தருடைய சித்தத் விலகிச் சென்றபோது, அவனை விழுங்க ஒ மீனைக் கர்த்தர் ஆயத்தப்பண்ணியிருந் மீனின் வயிற்றிலிருந்து யோனா, *"நா வெனில் துதியின் சத்தத்தோடே உமக் பலியிடுவேன்; நான் பண்ணின பொ தனையைச் செலுத்துவேன்; இரட் கர்த்தருடையது என்றான்"* (யோனா 2:9).

இங்குக் கூறப்பட்டுள்ள இரட் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பா? அ அன்று. கொந்தளிக்கும் கடலுக்குள் யோ தள்ளப்பட்டான். கடலின் மீன் அவ விழுங்கிற்று. மீனின் வயிற்றிலிருந்து விடு கோரி கர்த்தரிடம் விண்ணப்பஞ் செய்த அவனுக்குக் கிடைத்த இரட்சிப்பு இது. யோ

பாவத்தை உணர்ந்தான்; தேவ னத்திலிருந்து தான் விலகிப் போனதைக் த்து அறிக்கை செய்தான்.

யோனா மீனின் வயிற்றிலிருந்து, *ன்னும் உம்முடைய பரிசுத்த ஆலயத்தை க்குவேன் ...*" (யோனா 2:4) என்றான். ன் மீனின் வயிற்றிலிருந்து தேவாலயத்தை கி விண்ணப்பம்பண்ணினான். நம்முடைய வன் மனதுருக்கம் நிறைந்தவர் என்பதை ன் அறிந்திருந்தான்.

உடனே, தேவன் மீனுக்குக் கட்டளை டார். அது அவனைக் கரைக்குக் கொண்டு ன்று, அங்குக் கக்கிப்போட்டது. கர்த்தரால் க்கும் கட்டளையிடமுடியும்; காகத்துக்கும் ளையிட்டு எலியாவைப் போஷிக்க யும். அவர் உங்களுக்காக எந்த உயர் காரியிடமும், தாழ்ந்தவரிடமும் பேசமுடியும்.

பின்மாறிப்போன விசுவாசியே! தீர்க்க சியே! தீர்க்கதரிசினியே! மனந்திரும்பி த்தரிடத்தில் வருவாயாக. மனதுருக்கம் றைந்த அவர் உன்னை உனது எல்லா யத்திலிருந்தும் விடுவிப்பார்.

ஆம், நம்முடைய தேவன் எல்லா த்துக்களிலிருந்தும் நம்மை விடுவித்து ட்சிக்கிறவர்.

நமக்காக யுத்தம்பண்ணும் நம்முடைய தேவன்

"*நீங்கள் எவ்விடத்திலே எக்காளச் த்தத்தைக் கேட்கிறீர்களோ அவ்விடத்திலே து, எங்களோடே கூடுங்கள்; நம்முடைய தேவன் நமக்காக யுத்தம்பண்ணுவார் என்றேன்*" (நெகேமியா 4:20).

பாபிலோன் தேசத்தின் சிறையிருப்பி ருந்து நெகேமியா எருசலேமின் அலங் த்தைக் கட்டும்படியாய் வந்தான். அவனுக்கு ர்ப்பு வந்தது. சத்துருக்கள் அவன் கை த்துபோகுமட்டும் அவனை நிந்தித்து மதித்தனர்.

"*நாங்கள் அலங்கத்தைக் கட்டுகிற செய்தியைச் சன்பல்லாத் கேட்டபோது, அவன் கோபித்து, எரிச்சலடைந்து, யூதரைச் சக்கந்தம் பண்ணி: அந்த அற்பமான யூதர் செய்கிறது என்ன, அவர்களுக்கு இடங்கொடுக்கப்படுமோ, பலியிடுவார்களோ,...*" (நெகேமியா 4:1,2,) என்றெல்லாம் பேசி, நெகேமியாவின் கைகள் தளர்ந்துபோகத்தக்கதாக, அவனுடைய சத்துருக்கள் பயமுறுத்தினர். ஆனால் நெகேமியா கூறினது என்ன?

"*எங்கள் தேவனே, நாங்கள் அவமதிக்கப்படுகிறதைக் கேட்டு, அவர்கள் நிந்திக்கிற நிந்தையை அவர்கள் தலையின் மேல் திருப்பி, அவர்களைச் சிறையிருப்பின் தேசத்திலே சூறைக்கு ஒப்புக்கொடும்*" (நெகேமியா 4:4) என்றான்.

"*ஆனாலும் நாங்கள் எங்கள் தேவனை நோக்கி ஜெபம்பண்ணி, அவர்கள் நிமித்தம் இரவும்பகலும் ஜாமங்காக்கிறவர்களை வைத்தோம்*" (நெகேமியா 4:9) என்றான் நெகேமியா.

இங்கும், 'எங்கள் தேவன்' என்பது, நம்முடைய தேவனைத்தான் பொருள்படுத்தும். நெகேமியாவைப் பலவிதமான சத்துருக்கள் எதிர்த்தபோதும், அவன் தன் தேவனோடுள்ள ஐக்கியத்தை விடவில்லை. நெகேமியாவையும் அவன் கூட்டாளிகளையும் கொன்றுபோடு வதற்குரிய எல்லாச் சதித்திட்டங்களையும் தீட்டினர் சத்துருக்கள். நெகேமியாவோ சத்துருக் களின் சலசலப்புக்கெல்லாம் அஞ்சாது, வேலையில் முனைந்து செயல்பட்டான். "நம்முடைய தேவன் நமக்காக யுத்தம் பண்ணுவார்" என்றான்.

அன்பானவர்களே! இயேசுவை ஏற்றுக் கொண்டால் சத்துருக்கள் உங்களுக்கு விரோதமாக எழும்பவேமாட்டார்கள் என்று கூறமுடியாது. சத்துருக்களின் கூட்டம் உங்களுக்கு விரோத மாக நிச்சயம் எழும்பும். அதற்காக நீங்கள் அஞ்சி, இயேசுவைவிட்டுப் பின்வாங்கக் கூடாது.

இன்று யாராவது விசுவாசிகளைத் தூஷித்துவிட்டால் போதும்! "நான் இனி, சபைக்கே செல்லப்போவதில்லை" என்கின்றனர் அவர்கள். அது சரியல்ல. நெகேமியாவைப் போலுள்ள தைரியம் உங்களுக்கு வேண்டும்.

சாதாரண மனிதனின் பேச்சைக் கேட்டு நொந்துபோகாதீர்கள், மனங்கலங்காதிருங்கள், சத்துருக்களின் மிரட்டலுக்கு அடிபணியாதிருங்கள்.

"நான் இன்னின்ன உயர் அதிகாரிகளுக்கு மிகவும் நெருக்கமானவன்" என்று, உங்களை நோக்கி வீறாப்புடன் பேசினாலும் கலங்கவேண்டாம். உங்களுக்காக யுத்தஞ் செய்யும் தேவன் ஒருவர் உண்டு என்பதை அறிந்துகொள்ளுங்கள். ஆனால் நீங்கள் நிறைவேற்றவேண்டிய ஒரு நிபந்தனையுண்டு.

நீங்கள் யுத்தம்பண்ணினால் கர்த்தர் தம் கைகளைக் கட்டிக்கொண்டு வேடிக்கை பார்ப்பார். நீங்கள் கைகளைக் கட்டி ஜெபித்தீர்களானால், தேவன் உங்களுக்காக யுத்தஞ் செய்வார் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

சத்துருக்களின் எதிரே, நெகேமியா எருசலேமின் அலங்கத்தைக் கட்டி முடித்தான் என்று, நெகேமியா 6:1, கூறுகிறதைக் கவனிக்கவும். ஆம், நம்முடைய தேவன் நமக்காக யுத்தம்பண்ணுவார்.

பட்சிக்கிற அக்கினியாயிருக்கும் நம்முடைய தேவன்

"நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே" (எபிரெயர் 12:29).

இதுவரை நாம் கண்ட தேவன், மீட்பர், மனதுருகுகிறவர், இரட்சிக்கிறவர், நமக்காக யுத்தங்களைச் செய்பவர் என்றுள்ள காரியங்கள் நன்மைதரும் மகிழ்சியூட்டும் காரியங்களாகும். இப்போது நாம் காணவிருக்கும் நம்முடைய கர்த்தரோ, பட்சிக்கிற அக்கினியானவராவார்.

எபிரெயர் 12:25 முதல் 28 வரையுள்ள வசனங்களைக் கவனத்தோடு வாசித்தறியவும்.

"... பூமியிலே பேசினவருக்குச் செவி கொடுக்க மாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப் போகாமலிருக்க, பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டு விலகினால் எப்படி தப்பிப் போவோம்" (எபிரெயர் 12:25)?

பரலோகத்திலிருந்து பேசுகிறவர் கர்த்தர். அவருக்குச் செவிகொடுத்து, அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நட எச்சரிக்கையாயிருப்போமாக. நம்மு தேவன் மனதுருக்கத்தின் தேவனாயிருப்பி தெரிந்தும், துணிந்தும் தவறு செய்கி களைத் தண்டியாமலிரார். அவரது நீ பொறுமை நம்மைப் பாவஞ்செய்யத் தூ கூடாது.

"... அசைவுள்ளவைகள் உண்டா பட்டவைகள்போல் மாறிப்போம் ..."

"ஆதலால், அசைவில்லாத ராஜ்யத் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோ பக்தியோடும் தேவனுக்குப் பிரிய ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற் கொள்ளக்கடவோம்." ஏனென்றால், *"நம்மு தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிற"* (எபிரெயர் 12:27,28,29).

அன்பானவர்களே! நீங்கள் அசைவில் தேவனுடைய பரலோக இராஜ்ஜியத் நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறீர்கள். உங்களு தேவனைக் குறித்த பயம் வேண் உங்கள்மேல் அவர் கிருபையாய் இருப்பத அதனை உங்களுக்குச் சாதகமாக ஏற்று, பா செய்வது, அவருக்குப் பிரியமில்லாத கா களில் ஈடுபடுவது மிக மிகத் த எச்சரிக்கையாயிருப்பீர்களாக. அவர் பட்சி அக்கினி என்பதை மறந்துபோகாதீர்கள்.

இந்தச் செய்தியின் ஆரம்பம் இனி முடிவோ பயங்கரம் என்பதைத் தெளி அறிந்துகொள்ளுங்கள்.

"இந்தத் தேவன் என்றென்ற முள்ள சதா காலங்களிலும் நம்முடைய தே மரணபரியந்தம் நம்மை நடத்துவார்." ஆ

Instead of shame, a double portion of prosperity

Pastor M.K. Sam Sundaram

"For your shame ye shall have ble; and for confusion they shall re- in their portion: therefore in their they shall possess the double: ever- ing joy shall be unto them" (Isaiah 7).

The meaning of Isaiah 61:7 taken King James version is not clear. But, Living Bible gives it as, *"Instead of and dishonour, you shall have a le portion of prosperity and everlast- joy."*

There are three situations in your life e you may meet with shame, and in those ns you need to be blessed with a ble portion of prosperity. They are: in- iency, inability and inefficiency.

The shame of insufficiency

"And when they wanted wine, the er of Jesus saith unto him, They have wine" (John 2:3).

Jesus and His disciples were invited end a wedding at Cana in Galilee. Jesus' er was also there. The wedding feast was ogress and, a shortage in wine to be ed at the end of the feast was noticed. the mother of Jesus informed Him it, and Jesus told her that His hour was et come. Having done what she could he told the servants to do whatever Jesus asked them to do. Jesus told them to fill with water the stone waterpots that were kept there. There were six waterpots which were meant for purification as the Jewish custom demanded, each holding twenty to thirty gallons of water. The servants filled all the six waterpots up to the brim. Then Jesus told them to draw some out and take it to the manager of the feast and they did so. The manager tasted the water turned into wine, and was surprised since he did not know where such tasty wine came from; only the servants knew.

The manager of the feast called the bridegroom and told him that everyone served the best wine first, and after most people had drunk freely, served that which was not so good. He wondered why the bridegroom had kept back the good wine till then.

It was a custom in Palestine for Jewish families to serve wine at the end of the feast. Normally, at most weddings there will be a shortage of either food or the beverage that is given to guests as it is difficult to ascertain the exact number of guests who will turn up for the wedding and plan the wedding feast. When there is a shortage, the host orders the chef in charge of the feast to dilute the beverage by adding water to it. This is how the beverage that is served at the beginning is tastier than that which is served later.

At the wedding in Cana, however, it was the other way round because Jesus did a miracle by turning water into wine.

That was the beginning of miracles by Jesus and His miracles continue to happen even in the present age as we learn from an incident which happened in a small town in Germany long ago. A widowed mother of a little boy was reading out from the Bible the story of Elijah to her son. They were so poor that they had no food to eat that night. Both sat in a fireless room on a cold winter night. The little boy whose faith in God's miracles became strong after hearing the story of Elijah, told his mother to keep the doors open for God's ravens to bring them food. The mother who had always had great faith in God's power to sustain them, complied with her son's request. So, they sat beside the table that was bare.

Just then the Chief Magistrate of the town happened to pass by, and he noticed the door of this house alone left open on that cold winter night. He entered the house to inquire the reason. When he knew about their faith in God, he said he would be "God's raven" for them, and he not only sent them food for that night, he also saw to it that all their needs were met from that day onwards.

Dear reader, if you trust in God for His miracles, He will never fail you. He will not allow you to be put to shame because of your poor financial circumstances. He is a God of miracles and He will give you a double portion of prosperity.

The shame of inability

"And I brought him to thy disci... and they could not cure him" (Matt.17...

As Jesus came down from the mo... of transfiguration, a crowd of people ... rounded Him. One of them whose son ... epileptic came to Him and said that his ... often had fits and he kept falling into the ... or into the water. He added that he brou... him to His disciples, but they could not ... him of epilepsy. This inability to cure ... youngman brought shame on the discip...

When a servant of God or a belie... is called to serve God, He gives him pow... This power is given for casting out uncle... spirits and healing all kinds of disease ... all kinds of infirmity (Matt.10:1). Wh... Jesus had given His disciples the power ... heal all kinds of disease, it was indeed sham... ful that they were unable to cure the youngm... of epilepsy. This inability on their p... caused their ministry to be **despised.**

Similarly, your ministry may also ... despised because you are unable to sh... God's power by doing miracles such as he... ing and casting out demons. But, if you ... God to bless you with a double portion ... prosperity, He will bless your ministry ... give you a powerful ministry of **deliveran...**

"And Jesus rebuked the devil; ... he departed out of him: and the child ... cured from that very hour" (Matt.17:1...

After reproving His disciples for ... lack of faith, Jesus rebuked the devil in...

youngman and cured him of the disease instantly. This is the ministry of deliverance you as His servants are called to do. For this you need faith. You need to fast and pray systematically and make fasting a part of your Christian life. Then God will hear your prayers and make you successful in your ministry of deliverance.

Every minister of God may initially meet with failure in his ministry, but that should not discourage him. God will give him His power and he will get a double portion of prosperity.

After I gave my first message to the congregation in 1957, I told myself I would never preach again. I was wet with sweat due to fear. But, today, by the grace of God, I can stand before a big crowd and preach. God has blessed me so far and He will certainly bless my ministry of deliverance in the future as well

Before receiving the Holy Spirit, Peter was so cowardly that he denied Jesus not once but three times! His failure before his conversion did not deter him from preaching openly about Jesus to the Jews who had crucified Him. He could then lead about 3000 souls to the experience of salvation. This was the double portion of spiritual prosperity by way of a harvest of souls he received instead of the shame of denial.

Dear ministers of God! Use the power which you have received from the Holy Spirit and do the ministry. You will then see Him working powerfully through you.

You will have a double portion of prosperity instead of the shame of inability that Satan causes you to suffer in your ministry.

The shame of inefficiency

"Simon Peter saith unto them, I go a fishing. They say unto him, We also go with thee. They went forth, and entered into a ship immediately; and that night they caught nothing" (John 21:3).

God has endowed the people He has created with certain talents and they have a natural ability to do something which others do not have. For example, some are artists, some, musicians, some, talented singers, some, teachers, some, lawyers, and others, engineers and doctors. Many of those talented people are professionals. And, God has chosen some to be preachers like us. Whatever be your calling, there may be times in your life when your inefficiency is exposed.

After Jesus' death and burial, Peter who had lost all hope of following his Master, decided to take up his former profession of fishing. Therefore, he said to some of the disciples who were with him on the shore of the sea of Tiberias that he was going out fishing. The others also joined him and they went fishing. But, that night they caught nothing.

Fishermen usually go out to sea at night and return to the shore early in the morning after fishing all through the night. They cast their nets in that part of the sea where they intuitively or from experience know there are good varieties of edible fish.

Simon Peter, Andrew and the sons of Zebedee were expert fishermen, but on that night when they went fishing, they caught no fish although they toiled all night.

On the morning when they reached the shore, they saw Jesus standing there, but they did not know Him because they could not visualize Jesus being alive as the picture of Jesus dying on the cross was etched in their minds; neither did they remember Jesus' own words about His resurrection spoken to them before His death.

Jesus asked them if they had any fish to which they said, "No." Here we see their inefficiency in fishing being exposed. They were unsuccessful for the simple reason that Jesus was not with them when they went fishing.

On getting a negative answer from them, Jesus the resurrected Saviour told them to cast their net on the right side of the boat. They did according to His Word and got such a huge catch of fish that they could not haul their net on board. The presence of Jesus gave them the miracle of abundance of fish.

Paul the apostle says, *"I can do all things through Christ..."* Yes, you can do all things if Christ is with you. With Jesus you will be successful in your venture even if it is extremely difficult to achieve. Rely on Him and not on your own strength or intellect.

Just as there are countless numbers of different species of fish in the sea, Jesus has varieties of blessings for you. Whatever happens in your life which puts you to shame, remember Jesus is there to give you a double portion of prosperity. Therefore, do not brood over the unpleasant things that have caused shame in your life, but wait for the time when Jesus will bless you with abundant prosperity and peace.

All Sufficient

When I am tired, the Bible is my bed;
Or in the dark, the Bible is my light;
When I am hungry, it is vital bread;
Or fearful, it is armor for the fight.
When I am sick, 'tis healing medicine;
Or lonely, thronging friends I find therein.

If I would work, the Bible is my tool;
Or play, it is a harp of happy sound.
If I am arrogant, it is my school.
If I am sinking, it is solid ground.
If I am cold, the Bible is my fire;
And it is wings, if boldly I aspire.

Should I be lost, the Bible is my guide;
Or naked, it is raiment rich and warm.
Am I imprisoned, it is ranges wide;
Or tempest-tossed, a shelter from the storm.
Would I adventure, 'tis a gallant sea;
Or would I rest, it is a flowery lea.

Does gloom oppress? The Bible is a sun,
Or ugliness? It is a garden fair.
Am I athirst? How cool its currents run!
Or stifled? What a vivifying air!
Since thus thou givest of thyself to me,
How should I give myself great Book to thee

ஊழியர் பகுதி

விசுவாச அப்போஸ்தலன் ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்

தொடர்ச்சி

அன்பு சகோதரர் விக்கிள்ஸ்வொர்த் அவர்களுக்கு,

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக,

1932 ஆம் ஆண்டிலே நான் எனக்காக ஜெபித்து அனுப்பும்படி ஒரு கைக்குட்டை அனுப்பியிருந்தேன். தாங்கள் அதை எண்ணெயினால் அபிஷேகித்து, திருப்பி அனுப்பியிருந்தீர்கள். சுமார் 20 ஆண்டுகளாக அதாவது, 1912 முதல் 1932 வரை நான் மூட்டு வியாதி, எலும்புத் தேய்வு இடுப்புப்பிடிப்பு, கட்டமுற்சி ஆகிய வியாதிகளால் பெரும் பாடுபட்டுவந்தேன். நிரந்தர வேதனையில் தவித்தேன். டாக்டர்கள் கொடுத்துவந்த மற்ற மருந்துகளோடு 50,000 ஆஸ்பிரின் மாத்திரைகளும் இதுவரை சாப்பிட்டிருக்கிறேன். இத்தனை மாத்திரைகளும் என் வயிற்றை நாசமாக்காமல் இருந்ததே கடவுளின் கிருபைதான்.

நீங்கள் ஜெபித்து அனுப்பிய கைக்குட்டையை நான் பெற்றுக்கொண்ட அதே நேரத்தில் என் வலிகள் எல்லாம் அகன்றன. அடுத்து மூன்று நாட்களுக்குள் என் கை கால்களில் இருந்த வீக்கம் முழுவதும் வற்றிவிட்டது. அந்தநாள் முதல் இன்றுவரை என்னை முடக்கிவைத்திருந்த இந்த நோய்கள் வரவேயில்லை. ஒரு ஆஸ்பிரின் மாத்திரைகூட நான் இதுவரை சாப்பிடவில்லை . தேவனே எனக்கு நீங்கள் ஜெபித்து அனுப்பிய கைக்குட்டையின் மூலம் பூரணசுகம் கொடுத்தார்.

கட்டளையிட்டு

"*அப்பொழுது பேதுரு... நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி;*" (அப்போஸ்தலர் 3:6) மற்றும் (மத்தேயு 10:8) என்ற வசனங்களின் அடிப்படையிலும் இயங்கிய நேரங்களும் உண்டு. இயேசுவும், அவரது சீஷர்களும்கூட இவ்விதமாகச் செயல்பட்ட உதாரணங்கள் பலவுண்டு. விக்கிள்ஸ்வொர்த்தும் எந்த விதமான குறிப்பிட்ட ஜெபம் செய்யாமலேயே அவர் சுகமாக்குதலின் அற்புதங்களைக் கொண்டுவந்த நேரமும் உண்டு.

இங்கிலாந்து தேசத்தின் கூல்ட்ஸன் நகரில் வாழ்ந்து வந்த ஒரு மனிதன் அவருடைய பிரசங்கத்தைக் கேட்க அவரது கூட்டத்துக்கு வந்திருந்தான். நடுப்பகல் கூட்டம் அது. கூட்டம் முடிந்ததும் ஜெபத்துக்காக அவரருகில் போய் நின்றான். அவன் தீவிரமான நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருந்தான்.

அவனைக் கண்ட விக்கிள்ஸ்வொர்த் அவனுக்காக ஜெபிக்கவுமில்லை, அவன் மீது கைகளை வைக்கவுமில்லை. "வீட்டுக்குப்போ, நீ சுகமாகிவிட்டாய்" என்று மட்டும் சொன்னார். ஆனால், அந்த மனிதன் மாலை ஆராதனைக்கும் அங்கேயே தங்கிவிட்டான். நடுப்பகலிலே விக்கிள்ஸ்வொர்த் அவனிடம் சொன்னபோதே, தான் குணமாகிவிட்டதை அந்த மனிதன் உணராதிருந்ததால், அவன் மீண்டும்போய் ஜெபத்திற்காக அவரருகில் நின்றான்.

அவனைக் கடுமையாக உற்றுப்பார்த்த விக்கிள்ஸ்வொர்த், "நீ வீட்டுக்குப்போ என்று சொல்லிவிட்டேனே, நீதான் சுகமாகிவிட்டாயே!" என்றார். அந்த மனிதன் வீட்டுக்குப் போனான். அவன் சுகமாகியிருந்தான்.

இதைப்போலவே, அவர் நியூயார்க் நகரில் ஊழியம் செய்துகொண்டிருந்தபோது, கால் பெருவிரலில் உள்நோக்கி நகம் வளர்ந்திருந்ததால் நடக்க முடியாமல் வேதனையில்

தவித்த ஒரு பெண் ஜெபிக்க வந்திருந்தாள். "இயேசுவின் நாமத்தினாலே, தரையிலே ஓங்கி மிதி" என்று கட்டளையிட்டார் அவர். தரையில் காலை வைத்தாலே வேதனை தாங்கமுடியாது அவளுக்கு. ஆனாலும், அவள் தரையை ஓங்கி மிதித்தாள். அவள் குணமாகிவிட்டாள்.

மற்றொரு நிகழ்ச்சி. இது இங்கிலாந்து தேசத்தில் ராலி நகரில் நடந்தது. புண்ணாகி வீங்கிய காலோடு ஒரு பெண் வந்தாள். அவளுக்கு நடக்கவே முடியவில்லை. "சுகமாகு" என்றுமட்டும் சொன்னார் விக்கிள்ஸ்வொர்த். பின்னர் அவளை நோக்கி, "இப்போது ஓடு" என்றார். அவளுக்கு சிரிப்பு வந்துவிட்டது. மக்களுக்குமுன் தான் வேடிக்கையாக நடந்து கொள்ளக்கூடாது என்ற திடமான முடிவுடன் அப்படியே நின்றுகொண்டிருந்தாள்.

விக்கிள்ஸ்வொர்த் உறுமினார், "ஓடு, பெண்ணே, ஓடு." அவள் ஓடினாள். ஓடும் போதே சுகமாகியிருந்தாள்.

இவ்வாறு குறிப்பிட்ட ஜெபம் எதுவும் இல்லாமலேயே அப்போஸ்தலர்களைப்போல இயேசுவிடமிருந்து சுகத்தைப் பெற்றுத்தந்தார் விக்கிள்ஸ்வொர்த்.

வழக்கத்துக்கு மாறான வழிமுறைகள்

இதுவரை நாம் வாசித்து வந்ததற்கு மாறான, அதாவது வழக்கத்துக்கு மாறான வழிமுறைகளையும் திடீர் திடீரெனப் பயன்படுத்துவார் விக்கிள்ஸ்வொர்த்.

அவர் தமது சுகமளிக்கும் ஊழியத்திலே, ஜெபத்தின்போது மக்களை அடிப்பதோ, அறைவதோ, குத்துவதோ உண்டு என்பது பலரது பரவலான கருத்து. இதை அவர் எப்போதும் செய்வது இல்லை. ஆனால் சிலசமயம் செய்வார் என்பதே உண்மை.

பாவத்தையும் வியாதியையும் சமாளிக்க வேண்டிய நேரம் வரும்போது, பிசாசோடு தான் ஒரு நேரடிப்போரில் ஈடுபட்டிருப்பதை அவர் அறிவார். எனவேதான், அந்தப் பிசா... தாக்குவதில் அவருடைய சக்தி இவ்வித... வழிகளில் வெளிப்பட்டது.

ஒருமுறை ஒரு போத... விக்கிள்ஸ்வொர்த்திடம் வந்து, "நீங்கள் ஏ... மக்களை அடிக்கிறீர்கள்?" என்றுகேட்டார்.

"நான் எங்கே அவர்களை அடிக்கிறே... நான் பிசாசையல்லவா அடிக்கிறேன்!" என்... புன்னகையுடன் பதிலளித்தார் விக்கிள்ஸ்வொ...

"உங்கள் கையாலேயே நீங்கள் பிசா... அடித்துவிடமுடியும் என்று இன்றுதான் நா... புதிதாகக் கேள்விப்படுகிறேன்" என்று அ... போதகர் சொன்னபோது, "நீங்கள் கற்று... கொள்ளவேண்டியது இன்னும் ஏராளம் இரு... கிறது" என்று பதிலளித்தார் விக்கிள்ஸ்வொ...

அவருடைய இந்த "முரட்டுக் கனி... வெளிப்பட்ட சில நிகழ்ச்சிகளைக் காண்போ...

★ ஒரு முறை இரட்சண்ய சேனை... சேர்ந்த ஒரு பெண் ஜெபத்திற்காக வந்தா... தான் இரட்சண்ய சேனையைச் சேர்ந்த... என்பதற்கு அறிகுறியாக அவர்களது சீரு... யான வைக்கோல் தொப்பியும் அணி... திருந்தாள். முடமான அந்தப் பெண் ஒ... ஊன்றுகோலோடு நடந்துவந்தாள். ஜெபி... ஆரம்பித்ததும், அவர் அந்தப் பெண்ணை மிகவும் பலமாகக் குலுக்க ஆரம்பித்தார். அவ... தலையிலிருந்த தொப்பி பறந்தது. ஜெபத்தி... போது தேவவல்லமை அவளுடைய சரீரத்தி... ஒவ்வொரு அங்கத்தினுள்ளும் மின்னலெ... பாய்ந்துபோனதால், அப்பெண்ணுக்கு இ... ஒன்றும் தெரியவில்லை. அவள் தன் கோ... எறிந்துவிட்டாள். "இனிமேல் இது எனக்... தேவையில்லை" என்று சொல்லியவா... அந்தக் கட்டிடத்தைச் சுற்றிச்சுற்றி வரலா... அவள் சுகமானாள் என அக்கூட்டத்திற்... நிரூபித்தாள்.

★ ஒருமுறை கென்ட் பகுதியிலி... வந்திருந்தான் ஒரு விவசாயி. வயி...

ங்கமுடியாத வலி அவனுக்கு. "அப்படியே ..." என்று கட்டளையிட்டார் விக்கிள்ஸ்வொர்த். அவன் அப்படியே அசையாமல் நின்றான். பின், இயேசுவின் நாமத்தினாலே, குணமாகு!" என்று கூறியவாறே நடுவயிற்றில் ஓங்கிக் குத்தினார். அந்த மனிதன் உடனடி சுகம் பெற்றான்.

✱ இவரது தென் ஆப்பிரிக்க ஊழியங்களிலே ஒருமுறை ஒரு வேடிக்கையான சம்பவம் நடைபெற்றது. ஒரு பருத்த கனத்த சரீரமான உருவம் கொண்ட கருப்பர் இனத்தைச் சேர்ந்த பெண்மணி ஜெபத்துக்காக வந்தாள். ஜெபிக்கையிலே விக்கிள்ஸ்வொர்த் அவளுக்கு ஒரு குத்துவிட்டார். "ஓ, உனக்குத் தன் இது தெரியுமா?" என்று கூறியவாறே அவள்விட்டாள் ஒரு பலமானகுத்து விக்கிள்ஸ்வொர்த்துக்கு. வேறு எவராக இருந்தாலும் சுருண்டு விழுந்திருப்பார்கள் அவள்விட்ட குத்துக்கு.

விக்கிள்ஸ்வொர்த் நல்ல பெலசாலி; தாங்கிக்கொண்டார். மறுநாள் கூட்டத்துக்குத் திரும்பி வந்த அவள், மேடையேறி சாட்சி சொன்னாள். முந்தைய இரவு அவள் வீட்டுக்குச் சென்றதும் தான் பூரண சுகம் பெற்றுவிட்டதாகவும், தன் சரீரத்திலே ஒரு குறைகூட இல்லை என்றும் கூறினாள். அத்துடன் மிகுந்த வெட்கத்துடன் நாணிக்கோணி, தேவனுடைய மனுஷனை அடித்துவிட்டதற்காக மன்னிப்பும் கேட்டுக்கொண்டாள்.

✱ ஆஸ்திரேலியாவில் நடந்த நிகழ்ச்சி இன்னும் வினோதமானது. அங்கிருந்த ஒரு மெதடிஸ்ட் சபைப் போதகர் தொண்டையிலே ...று நோய்வந்து மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அந்தக் கட்டிகளும், புண்களும் அவருக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்துவந்தன. இவற்றை மறைக்க, கழுத்தைச் சுற்றித் துணிகளால் கட்டுப் போட்டிருப்பார் அவர். ஜெபத்தால் அற்புதசுகம் கிடைக்கும் என்ற நம்பிக்கை கொண்டவர்தான் அவர்.

எனவே, விக்கிள்ஸ்வொர்த்தின் சுகமளிக்கும் ஊழியத்தைப் பரிசோதித்துப் பார்த்துவிட வேண்டுமென்றே கூட்டத்துக்கு வந்தார். மெல்போர்ன் நகரில் நடந்த கூட்டம் அது. பிரசங்கத்தைக் கேட்டார்; நம்பிக்கை கொண்டு கடைசிவரை காத்திருந்து இறுதியாக ஜெபத்திற்குச் சென்றார். என்ன பிரச்சினை என்று கேட்டறிந்துகொண்ட விக்கிள்ஸ்வொர்த், அவரது கழுத்தின்மீது பயங்கரமான ஒரு அறைவிட்டார். அந்தப் போதகருக்கு அந்தத் துணிக்கட்டின் பாரத்தைத் தாங்குவதுகூட மிகக் கஷ்டமாயிருக்கும். ஆனால், விக்கிள்ஸ்வொர்த் அவரை அறைந்த பொழுது அவருக்கு எந்தவலியும் ஏற்படவில்லை.

"வீட்டுக்குப்போங்கள், நாளை காலையில் இந்தத் துணிக்கட்டுகளையெல்லாம் பிரித்து விடுங்கள். அங்கு எந்தக் கட்டியும் இருக்காது" என்றுகூறி அவரை அனுப்பிவிட்டார் விக்கிள்ஸ்வொர்த். இந்தப் போதகர் தாங்க முடியாத வலியால் எப்போதும் துடித்துக் கொண்டிருந்தபடியால் அவருக்கு இரவில் ஒருபோதும் தூக்கம் வராது. ஆனால் அன்றோ அமைதியாக உறங்கினார். மறுநாள் காலை, தமது கட்டுகளை அவர் பிரித்துப்பார்த்த போதோ, அங்குப் புண்களும் இல்லை, கட்டிகளும் இல்லை. அவை இருந்து பின் குணமானதற்கு அடையாளமாக ஒரு சிறு தழும்புங்கூட இல்லை.

✱ இது மட்டுமல்ல. சந்தர்ப்பம் வந்தால் பிறர்மீது தாம் பிரயோகிக்கும் இந்தவிதமான "முரட்டுக்கனிவை" அவர் தம்மீது கூடப் பிரயோகித்துக்கொள்வார். ஒருமுறை விக்கிள்ஸ்வொர்த், முதுகு வலியால் தவித்த பொழுது, பெத்ஷரன் சபையின் ஊழியரான திரு. ஜான் நெல்சன் பார் என்பவரை அழைத்து, தமக்காக ஜெபிக்கும்படி வேண்டிக் கொண்டார். அவரும், தமது கரத்தை வலியிருந்த பாகத்தின்மேல் மென்மையாக வைத்துக்கொண்டு விக்கிள்ஸ்வொர்த்துக்காக ஜெபித்தார்.

"இது போதாது, ஜான், நீ அதை அடித்து விரட்ட வேண்டும். இப்போது ஒழுங்காக அதைச் செய்" என்றார் விக்கள்ஸ்வொர்த்.

தனக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையின்படியே ஜான் மீண்டும் ஜெபிக்க ஆரம்பித்தார். ஆனால் இந்த முறை வலியிருந்த இடத்தில் நிஜமாகவே ஒரு பலமான குத்துவிட்டார்.

"வலியெல்லாம் போச்சு! அல்லேலூயா!" என்று உரக்கக் குரல் கொடுத்தார் விக்கிள்ஸ்வொர்த். வழக்கமாக அடி கொடுப்பவர் அவர். ஆனால் அன்று அடி வாங்கினார்

இதற்கு ஆதாரமாக, வலிமை சே வண்ணமாக அவர் அடிக்கடி கூறிவரும் "...பரலோக இராஜ்யம் பலவந்தம் ப படுகிறது. பலவந்தம் பண்ணுகிறவர்கள் அ பிடித்துக்கொள்ளுகிறார்கள்" (மத்தேயு 11 இந்தக் கொள்கையை, "நமக்குத் தேவை ஒரு பலவந்தமான பக்தி" என்று அறிஞர் கிளார்க் குறிப்பிட்டிருக்கிறார். விக்கிள்ஸ்வொ திடம் நிறைந்திருந்ததும் இதுவே. (தொட

இயேசு கிறிஸ்துவின்
சிலுவையைப்பற்றிய உபதேசம்

"நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்" (எபிரெயர் 9:14)!

பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்து இயேசு சிலுவையில் சிந்திய இரத்தமானது, நம்முடைய மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிக்கின்றது. அதன் விளைவாகவே நாம் தேவனுக்கு ஊழியஞ்செய்யுமாறு நம்முள்ளத்தில் துணிவுடன் கூடிய ஆர்வம் உண்டாகின்றது. நம்முடைய உள்ளத்தில் துணிவார்வம் பிறக்கும் போது நாம் நம்முடைய முழு ஆர்வத்தோடும் முழு பெலத்தோடும் தேவனுக்கு ஊழியஞ்செய்வோம்.

பிசாசானவன் நாம் தேவனுடைய ஊழியத்தில் முன்னேறக் கூடாதவாறு நம்மீது பொய்யான குற்றஞ்சாட்டி நம்மை அதைரியப்படுத்த முற்படுவான். அவ்வேளைகளிலெல்லாம் இயேசு சிலுவையில் சிந்திய இரத்தத்தை நாம் உரிமை பாராட்டி, பிசாசை மேற்கொள்ளவேண்டும். இக்காரியத்தில் பரிசுத்த பவுல் நமக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றார். அவருடைய வாய்மொழி கேட்போம்.

"நான் அப்போஸ்தலரெல்லாரி சிறியவனாயிருக்கிறேன்; தேவனு சபையைத் துன்பப்படுத்தினதினாலே, அப்போஸ்தலனென்று பேர் பெறுவத பாத்திரன் அல்ல. ஆகிலும் நான் இருக்கி தேவ கிருபையினாலே இருக்கிறேன்; எனக்கு அருளிய கிருபை விருதாவாயி வில்லை; அவர்களெல்லாரிலும் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் அல்ல, என்னுடனே இருக்கிற கிருபையே அப்படிச் செய்தது" (1 கொரிந் 15:9,10).

இங்கு அப்போஸ்தலனுக்குத் தம்மு ஊழியத்தில் கொண்டிருந்த துணிவுடன் கூ ஆர்வமுடைமையையும், அதே வேளை அவருடைய மனத்தாழ்மையையும் காணலாகும்.

ஆம், சிலுவையில் சிந்திய இ கிறிஸ்துவின் இரத்தத்தினால் நம்மு மனச்சாட்சியானது செத்த கிரியைக சுத்திகரிக்கப்படுகின்றது. அதன் விளைவா நாம் தைரியத்துடன் தேவனுக்கு ஊழியஞ்

றோம். தேவ ஊழியத்தில் நாம் முனைந்து ணேற திவ்விய உண்மையுடன் கூடிய சுத்த சாட்சியே நமக்கு உறுதுணையாகும்.

ிஸ்துவுக்குள் வெற்றி வாழ்க்கை

"மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் ற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் மல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை யித்தார்கள்" (வெளிப்படுதல் 12:11).

"அவனை ஜெயித்தார்கள்." இங்குச் ப்பட்டுள்ள அவன் யார்? அவன்தான் கமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட ழய பாம்பாகிய வலுசர்ப்பம் (வெளி. 12:9). வனே தேவனுடைய சமுகத்தில் இரவும் லும் நம்மீது குற்றஞ்சாட்டுகிறவன் (வெளி. 10). அவனை மேற்கொள்ளுதற்குரிய ஒரே ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தமும், முடைய சாட்சியின் வசனமுமேயாகும்.

சாத்தான் நம்முடைய உள்ளத்தில் விசுவாசத்தையும் ஐயப்பாட்டையும் அச்சத் தையும் எழுப்புகின்றான். அதற்கு எதிரிடை கத் தேவன் அவரைப்பற்றும் விசுவாசத் தோடேகூட பலமும் அன்பும் தெளிந்த தியுமுள்ள ஆவியைக் கொடுத்திருக்கிறார் தீமோத்தேயு 1:7).

பிசாசானவன் உலகத்தின் மக்களை திரதந்திரங்களினாலும் பில்லிசூன்யக் டுகளினாலும் துன்புறுத்துகின்றான். நாமோ வனையும் அவனுடைய பொல்லாத யைகளையும் இயேசு கிறிஸ்துவின் த்தத்தினாலே அழிக்கின்றோம். நம்மீது புகூருகின்ற கிறிஸ்து இயேசுவினாலே றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்களா க்கிறோம். பிசாசின் கிரியைகளை க்கும்படிக்கே தேவனுடைய குமாரன் ளிப்பட்டார் (1 யோவான் 3:8).

இவ்வாறாக கிறிஸ்து இயேசு வையில் சிந்திய புண்ணிய இரத்தத்தினால் க்கு உண்டாகும் நன்மைகள் பலப்பல. ஆயினும் இதுகாறும் தியானித்த நன்மைகளை மீண்டும் நினைவுகூருவோம். அவைகள் முறையே பாவமன்னிப்பாகிய மீட்பு, தேவனைக் கிட்டிச் சேர்தலாகிய பெறலரும்பேறு, தேவனுக்கு ஆராதனை செய்தல், தேவ சமாதானம், பரிசுத்தமாக்கப்படுதல், தேவ ஊழியத்தில் துணிவுடன் கூடிய ஆர்வமுடைமை, கிறிஸ்துவுக்குள் வெற்றி வாழ்க்கை என்பனவாம்.

சிலுவையில் சிந்திய கிறிஸ்துவின் இரத்தத்தினால் நமக்கு உண்டாயிருக்கின்ற வெற்றி வாழ்க்கையில் சிறந்தோங்கி வாழ்ந்து, அவருடைய வருகையில் அவரோடேகூட சேர்ந்துகொள்ளத் தேவன் தாமே நமக்கு அருள்புரிவாராக.

இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் நோக்கம்

"நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" (1 பேதுரு 2:24).

இந்த வேத வாக்கியமானது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் நோக்கத்தை நமக்கு வெளிப் படுத்துகின்றது. ஆயினும் கிறிஸ்து இயேசுவின் சிலுவை மரணத்தின் நோக்கங்கள் பல. இந்நோக்கங்களை நாம் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த கிறிஸ்து இயேசு அல்லது தேவகுமாரன் என வரும் வேத வாக்கியங்களில் காணலாம். ஆகவே இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் நோக்கங்களை நாம் இத்தகைய வேத வாக்கியங்களின் வாயிலாகத் தியானிப்போம்.

இரட்சிப்பு

"எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். தேவன்

ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது" (1 தீமோத்தேயு 2:4-6).

"எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனிதனாகிய கிறிஸ்து இயேசு அவரே" என்று சொல்லுகின்றது இந்த வேதவாக்கியம். எங்கே அவர் தம்மை ஒப்புக்கொடுத்தார் என்பது சொல்லாமலே விளங்கும். "எல்லாரையும் மீட்கும் பொருளாக" என்று சொல்லுவதன் பொருள்தான் என்ன? எல்லாரையும் இரட்சிக்கும்படியாகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார் என்பதே அதன் பொருளாகும். ஆகவே சிலுவை மரணத்தின் நோக்கங்களில் ஒன்று இரட்சிப்பு என்பது தெளிவு.

'*எல்லா மனுஷரும் இரட்சிக்கப் படவும்,...*' (வசனம் 4) என்னும் சொற்றொடரில் மனுமக்கள் யாவரும் அடங்குவர். "*எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி,*" என்று திருமறை கூறுகிறது (ரோமர் 3:23). ஆகவே, 'எல்லாரும்' என்ற சொல்லில், "எங்களுக்கு இரட்சிப்பு தேவையில்லை" என... கூறுகின்ற நல்லொழுக்க வீறாப்புணர்வு... மக்களும் அடங்குவர். அவர்களுடைய... அழுக்கான கந்தையென்பதனை அவ... அறியாதிருக்கின்றார்கள்.

"*...தேவன் ஒருவரே, தேவனுக்... மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே*..." (வசனம் 5). இந்த வேத வாக்கியத்தி... மனுமக்களுக்கும் தேவனுக்குமிடையே உ... நடுவர் நம்முடைய கர்த்தராகிய இ... கிறிஸ்துவேயன்றி வேறொருவருமிலர். ரோ... கத்தோலிக்க மார்க்கத்தார் சொல்வதுபோ... இயேசு கிறிஸ்துவின் தாயாராகிய மரியா... ஏனைய பரிசுத்தவான்களோ அல்லர் என... வெளிப்படை. மேலும் இம்மெய்ந்நிலை... அரண் செய்யும் வேதாகமப் பகுதிகள் வரு... (1 கொரிந்தியர் 1:12,13), (1 யோவான் 1... 2:1,2), (யோவான் 1:1-11) இவைக... வாசித்துத் தெளிவுடைவீர்களாக.

இவ்வாறு மனுமக்களின் இரட்சிப்புக்... —அதாவது அவர்களை மீட்கும் பொருளாக... நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறி... தம்மைத் தாமே சிலுவையின் மரணத்தி... ஒப்புக்கொடுத்தார். (தொட...

பெண்கள் பகுதி

கிழியுண்ட திரை

குல்ஷான் எஸ்தர்

தொடர்ச்சி

வேலை தேடும்படி புறப்பட்டேன். அநேக பள்ளிகளில் ஏறி, இறங்கினேன். உருது, இஸ்லாமிய மத அறிவு, சரித்திரம், பூகோளம், கணிதம் போன்ற பாடங்களை மெட்ரிகுலேஷன் அளவுக்குக் கற்றுக்கொடுக்கும் கல்வியறிவு எனக்குக் கிடைத்திருந்தது.

மூன்று வாரங்கள் பட்டணத்தின் பல இடங்களுக்குச் சென்று அலைந்துத் தேடினேன், வேலை வாய்ப்பு அலுவலகத்திலும் பதிவு செய்தேன். ஓட்டைவிழுந்த செருப்புபோட்டுக் கொண்டு பட்டப்பகலின் கடும்வெயிலில் அங்குமிங்கும் அலைந்தேன். ஊக்கமிழ... உள்ளம் கோபத்தால் உறுமும்போது, ... இயேசு எனக்காக மரிக்கும்படி சிலுவை... சுமந்துகொண்டு தெருக்கள் வழியாக நட... சென்றக் காட்சியை என் கண்முன் நிறு... ஆறுதலடைந்தேன்.

ஜானும் பம்லாவும் என்னை ஆ... படுத்தினர். நான் வேலை பார்க்கவேண்... அவசியமில்லையென்றும் தாங்களே என்... பராமரிக்க முடியுமென்றும் உறுதி கூறினா...

பழைய அனார்க்கலி பஜாரில்...

திகழின் அலுவலகத்தில் ஒரு நாள் காலை மணிக்குப் பேட்டிக்காகச் சென்றேன். பத்திரிகைப் பதிப்பாசிரியர் மிகுந்த மரியாதையோடு என்னை வரவேற்றுப்பேசினார். நான் வேலைதேடி வந்துள்ளேன் என்று அறிந்தார். மிகக் கூர்மையாக என்னை ஆராய்ந்தார். "நாளை காலை 8.30 முதல் 9.00 மணிக்குள் நீ வேலையில் வந்து சேர்ந்து கொள்ளலாம். உன் வேலையைப்பற்றி, மனக் கவலை கொள்ளாதே. நீ எனது பத்திரிகைக்குப் பேட்டியாளராகச் சென்று, சில பெண்களைப் பேட்டி கண்டு எனக்குக் கட்டுரை எழுதித் தரவேண்டும். என்ன கேள்விகள் கேட்க வேண்டுமென்றும் நானே உனக்குச் சொல்லிக் கொடுத்துவிடுவேன்" என்று என்பேரில் மிகுந்த பரிவுடன் பேசினார்.

எனக்கு மாதம் ரூபாய் 100/- சம்பளம் என்று தீர்மானிக்கப்பட்டது. இதைத் தவிர, பேட்டி காணும் பெண்கள் என்னிடம் கொடுக்கும் பணத்தில் இருபது சதவீதம் எனக்குக்கிடைக்கும்.

மறுநாள் சரியான நேரத்தில் வேலைக்குச்சென்றேன். "நீ ஒரு முஸ்லிம் அல்ல என்று நினைக்கிறேன்" என்றார் பத்திரிகையின் பதிப்பாசிரியர்.

"நான் ஒரு கிறிஸ்தவள்" என்று பதிலுரைத்தேன். பதிப்பாசிரியர் நீண்ட நேரம் அமைதியாயிருந்தார். என் உள்ளம் வேதனையால் உருண்டது.

"சரி, அதனால் அவ்வளவு வித்தியாசம் வரப்போவதில்லை. நீ கல்வி கற்றவளாக இருக்கிறாய். மற்றவர்களிடம் பேட்டி காண அஞ்சமாட்டாய் என்று நினைக்கிறேன்" என்று கூறினார். என்னைப் பதிப்பாளர் அலுவலகத்துக்கு அழைத்துச்சென்றார்.

செய்தியாளர் ஒருவரும், புகைப்படம் எடுப்பவர் ஒருவரும், கையெழுத்தை நேர்த்தியாக எழுதுபவர் ஒருவரும் அங்கு எனக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர். அங்கிருந்த மற்றொரு அறை சாப்பாட்டு அறை. அங்கு மற்ற இரு உதவியாளர்கள் இருந்தனர். ஏழு ஆண்களுக்கு மத்தியில் நான்மட்டும் ஒரே பெண். அவர்கள் என்னை "பாஜி" (சகோதரி) என்றே அழைத்தார்கள்.

பத்திரிகையின் பதிப்பாசிரியர் கற்றுக் கொடுத்த காரியங்களையும் கேள்விகளையும் எழுதும் முறைகளையும் சீக்கிரம் கற்றுக் கொண்டேன். முதலில் நான் பேட்டிகாணும் படியாக இருந்த பெண் ஒருபெரிய சீமாட்டி. மிகுந்த கல்வி கற்றவர். முன்னாள் பிரதம மந்திரியான திரு. பூட்டோ அவர்களின் அமைச்சரவையில் இருந்து, பிரதமருடன் கருத்துவேறுபாடு வந்ததால் இராஜினாமா செய்த வெளியுறவு அமைச்சரின் மனைவியே அவர்.

எனக்கு நேர்த்தியான வரவேற்பு கிடைத்தது. ஆகவே, முன்பு என்னைச் சிறையிலடைத்துவிட்ட அம்மையாரைப்போல இவர்களும் செய்துவிடுவார்களோ என்று பயந்தேன். கேள்விகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கேட்டேன். புகைப்படம் எடுப்பவர் அல்தாப் படங்களைப்பிடித்தார். ஆங்கிலத்தில் பேசப்பட்ட வார்த்தைகளை அவரே மொழி பெயர்த்துச் சொல்லி, எனக்கு உதவிசெய்தார்.

பேட்டி இனிமையாக முடிவுபெற்றது. என் அறிக்கையைத் திறம்பட எழுதிக் கொடுத்தேன். பதிப்பாசிரியர் பரவசமடைந்தார். என்பெயருடன் கட்டுரை பத்திரிகையில் பிரசுரமாயிற்று. ஆயிரக்கணக்கான மக்கள் அதை வாசித்தனர்.

பேட்டியில், தான் கௌரவிக்கப் பட்டதால் அச்சீமாட்டி எனக்கு ரூ.700 கொடுத்தார்கள். அதில் என் பங்காகப் பதிப்பாசிரியர் கொடுத்தது ரூ. 140. அதை நான் ஜானிடம் கொடுத்துவிட்டேன். "தேவன் உனக்கு உதவிசெய்கிறார் என்பதைக் கண்டு மகிழ்கிறோம்" என்ற ஜான், மனமில்லாமலேயே நான் கொடுத்த பணத்தைப் பெற்றுக் கொண்டார்.

லாகூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியைப் பேட்டி கண்டேன். திறம்படக் கேள்விகளைக் கேட்டேன். பற்பல புகைப்படங்களும் எடுக்கப்பட்டன. பேட்டி பத்திரிகையில் பதிப்பாகி வெளிவந்தது. பதிப்பாசிரியர் என்னை மெச்சிக்கொண்டார்.

மூன்று நாட்கள் கழித்து நான் மறுபடியும் அப்பள்ளிக்குச் சென்றேன். தலைமையாசிரியை செலுத்த வேண்டிய மீதிப் பணத்தைப் பெற்றுக் கொள்ளும்படியாக அவர்களது அறைக்குச் சென்றேன். பள்ளி ஆசிரியைகளில் ஒருவர் கிறிஸ்தவராக இருந்ததால் எனது வாழ்க்கையில் நடந்த அற்புதத்தைக் குறித்து தலைமை ஆசிரியையிடம் ஏற்கனவே கூறியிருந்தார். ஆகவே தலைமையாசிரியை என்னைச் சந்தித்துப் பேச ஆவலுடன் இருந்தார்கள்.

"நீ ஏன் கிறிஸ்தவளாக மாறினாய்? நீ மறுபடியும் உன் முஸ்லிம் பக்திக்கு வந்து சேரும்படி நான் உனக்குத் தேவையான எல்லா உதவியும் செய்வேன்" என்றார்கள்.

நான் என் சாட்சியில் ஒரு சிறு பகுதியைத் தலைமையாசிரியைக்கு மற்ற ஆசிரியைகள் முன்னிலையில் கூறினேன். "உனக்குப் பிறரைப்பராமரிக்கும் மனப்பான்மையும் திடமான நம்பிக்கையும் இருக்கிறது" என்று தலைமையாசிரியை கூறினார்கள்.

என் வேலையில் தவறுகள் நடக்காததால் புதிய தைரியத்துடன் பணிபுரிந்தேன். என்பெயரில் வெளிவந்த அநேக பேட்டிகளை பாகிஸ்தான் முழுவதும் அநேகர் வாசித்தனர். "எஸ்தர்" என்ற எனது கிறிஸ்தவப் பெயரைப் பிரசுரிக்க, பதிப்பாசிரியர் மறுத்துவிட்டார். பெண்களின் முன்னேற்றத்திற்கான சாத்தியக் கூறுகளை வெளிப்படுத்தும் வார்த்தைகளை நான் எழுதினேன்.

என் உள்ளத்தின் ஆழமான வாஞ்சையோ வேறு திசையிலன்றோ சென்றுகொண்டிருந்தது. தேவனைச் சேவிக்கவும் அவருடைய சித்தத்தைச் செய்யவும் எவ்வளவு ஆசைப்பட்டேன்! என் உள்ளத்தின் ஆர்வத்துக்கு முற்றிலும் வேறுபட்ட அப்பத்திரிகை பணியில் நான் ஏன் இருந்தேன்? எனது யாத்திரை என்னை ஏன் அத்திசைக்கு அழைத்துச்சென்றது?

என்னால் விளங்கமுடியாத அனுதினப் புதிராகவே அது இருந்தது. என் வாழ்க்கை இரண்டு பகுதிகளாகத் துண்டிக்கப்பட்டிருந்ததைக் கண்டேன். பணி செய்வதற்குரிய வெளிப்புற வாழ்க்கையும், தேவனோடு ஐக்கியம்கொண்டு அனுபவித்த தெய்வீக வாழ்க்கையுமே அவை.

எனது உடன் பத்திரிகைத் தொழிலாளர் நான் கிறிஸ்தவள் என்று அறிய வந்ததும் என்னை எள்ளி நகையாட ஆரம்பித்தனர்.

"நீ மூன்று கடவுள்களைக் கும்பிடுகிறவளாகிவிட்டாய்" என்பர்.

அவர்களிடம் நான், "ஒரே தேவன் மட்டுமே உண்டு. அத்தேவன் தம்மை, பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, ஆகிய இந்த மூன்று விதங்களில் வெளிப்படுத்திக் காண்பிக்கிறார்" என்று கூறினேன். தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து வெறும் தீர்க்கதரிசியல்ல என்று விளக்கினேன். பெந்தெகொஸ்தே நாளில் அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியானவர் தேவனை விசுவாசிக்கும் மக்களின் உள்ளங்களில் ஜீவித்து, அவர்களுக்குப் போதித்து பரிசுத்தப்படுத்துகிறார் என்றும் விளக்கினேன்.

அவர்கள் மனதை மாற்றுவது கடினமாக இருந்தது. ஏனெனில் சிறு பிள்ளைப் பிராயத்திலேயே பிஞ்சு உள்ளங்களில், கிறிஸ்தவ மார்க்கத்தைக் காட்டிலும், "ஒரு கடவுள்" கோட்பாட்டைக் கொண்டுள்ள இஸ்லாமே சிறந்தது என்று பதித்துவிடுகிறார்கள். தங்கள் மார்க்கத்தில் என் சக பத்திரிகையாளர்கள் பெருமை பாராட்டினாலும், அவ்வலுவலகத்தில் ஒருவர்கூட மதிய தொழுகையை செய்வதேயில்லை.

ஒருநாள் மாலை 4 மணிக்கு நான் அலுவலகத்தின் படிக்கட்டிலிருந்து இற

...லைக்கு வரும் சமயம், அடுத்து அமைந்திருந்த மிட்டாய்க் கடையின் சொந்தக்காரர் மிகுந்த மரியாதையுடன், "சலாம் அலைக்கும்" (சமாதானம் தங்கள் மேல் தங்குவதாக) என்றார். நானும் "வஹ் லைக்கும் சலாம்" (தங்களுக்கும் அப்படியே ஆகுக) எனப் பதில் வாழ்த்துதலைச் சொன்னேன்.

"தாங்கள் இப்பத்திரிகை அலுவலகத்தில் பணிபுரிவதைக் கவனித்துவந்திருக்கிறேன். தாங்கள் நன்கு கல்வி கற்றிருக்க வேண்டுமென நம்புகிறேன். என்னுடைய மூன்று பிள்ளைகளுக்கும் பாடம் சொல்லிக் கொடுப்பீர்களா? தயவு செய்து எங்கள் வீட்டுக்கு வாருங்கள். அங்கு மற்றவற்றை முடிவு செய்வோம்" என்று அழைத்தார்.

நான் முதலாவது தாமதித்தேன். ஆனாலும் பத்திரிகைத் தொழிலில் போதுமான வருவாய் இல்லை என்பதை உணர்ந்தேன்.

ஆகவே அவர் வீட்டுக்குச் சென்று அவரது மனைவியிடம் பேசினேன். மாலை உணவோடு மாதம் ரூ. 150. மூன்று பிள்ளைகளுக்கும் பள்ளி முடிந்தபின் ஒவ்வொரு நாளும் பிற்பகல் இரண்டு மணிநேரம் உருது, கணிதம், இஸ்லாமியம், சரித்திரம், பூகோளம் கற்றுக் கொடுப்பதாக ஒத்துக்கொண்டேன்.

மதீனா காலனியிலிருந்து வந்தால் இரவில் திரும்பிச் செல்லமுடியாதாகையால், நான் அன்பான ஜானின் குடும்பத்தினரிடம் விடைபெற்று, வாரிஸ் சாலையில் வசித்த சங்கீத ஆசிரியர் திரு. நீலம் அவர்கள் குடும்பத்தினருடன் வசிக்க ஆரம்பித்தேன்.

டிசம்பர் மாதத்திற்குள்ளாக என்னுடைய எட்டு அல்லது ஒன்பது பேட்டி அறிக்கைகள் அச்சில் வெளிவந்தன. எழுதியவர் 'குல்ஷான்' அல்லது 'எமது பெண் நிருபர்' என்று அவைகள் பிரசரிக்கப்பட்டன. (தொடரும்)

Youth Section

The heroic exploits of a youngman

Acts 23:16-24 (KJV)

This passage tells us about the valour of a youngman, Paul's sister's son. This man in the prime of his youth, heard about the conspiracy against his uncle Paul the apostle. He realised that his uncle's life was in jeopardy. Therefore, he decided to do something before the plot took shape. He engaged himself in a risky enterprise with the sole object of saving Paul's life. The Lord was with him and enabled him to fulfil the dangerous mission. From this episode one can draw five exemplary traits which this youngman possessed.

1. Concern—The youngman had concern for the safety of his uncle Paul the apostle. Acts 23:16 says, "*And when Paul's sister's son heard of their lying in wait, he went and entered into the castle and told Paul.*" His concern for Paul was great because he recognised the fact that Paul's ministry was at stake. He closely followed the heels of the great missionary and so he discovered the strategy planned against the Apostle. He knew that Paul could be killed anytime, if he did not do something to foil the treacherous plan. His life was in danger. That did not deter him from casting himself boldly on this venture.

2. Commitment for the progress of the ministry—The youngman was not a preacher. He did not involve himself in any avenue of the Lord's work. We have to appreciate one thing. The youngman voluntarily committed himself to the progress of the ministry. The formative years of the youngman were shaped in righteous ways. His parents brought him up in the fear and admonition of the Lord. He did not want the ministry to suffer. He resolved unflinchingly that service to the Lord should not come to a standstill. Needless to say he desired that many should come to the saving knowledge of Jesus Christ and that many churches should be established. Thank God for the spiritual commitment of the youngman.

3. Caution—The fact that the youngman had access to the chief captain staggers our imagination. The tense situation demanded the young man's extraordinary courage. His chivalry and gallantry deserve special mention. Acts 23:20,21 renders thus: *"And he said, The Jews have agreed to desire thee that thou wouldest bring down Paul tomorrow into the council, as though they would inquire somewhat of him more perfectly. But do not thou yield unto them: for there lie in wait for him of them more than forty men, which have bound themselves with an oath, that they will neither eat nor drink till they have killed him:"* Providence worked out in such a way that the chief captain heard the warning given by the youngman, believed him, heeded the caution and took active steps to liberate Paul from the dangerous situation.

4. Completion—The saying go thus, "A thing well begun is half done." A work that is started must be completed. Th young man started the dangerous work completed it. Acts 23:23,24—*"And called unto him two centurions, sayi Make ready two hundred soldiers to go Caesarea, and horsemen threescore ten, and spearmen two hundred, at the th hour of the night; And provide them bea that they may set Paul on, and bring h safe unto Felix the governor."* Th youngman did not dictate to the captain h he should organise safety measures. Go Himself intervened and so men and anim were pressed into service. Hazards of th mission were eradicated and Paul was tak to a safe destination. God gave the you man wisdom to execute the details of th mission and the entire herculean task w completed.

5.Celebrity status—Even thou the youngman was exposed to the assault the conspirators, he mustered courage an brought the matter to fruition. Whatever done for the cause of the ministry will b bountifully rewarded. The young man's en deavour for the noble enterprise earned hi a celebrity status. The name of the youngm is not mentioned. His parentage is co cealed. Nevertheless, the sincere efforts the youngman to rescue Paul from assas nation, are recorded in the Holy Bible. W was latent became patent. What th youngmen and young women do for the L will not remain obscure for a long tim Those acts of yeoman service will be broug to the public eye and God will bring them celebrity status.

உன் பெற்றோரை அசட்டைபண்ணாதே

*"உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவி
...டு; உன் தாய் வயதுசென்றவளாகும்போது
...ளை அசட்டைபண்ணாதே"* (நீதிமொழிகள்
...22).

என் அன்பான செல்லங்களே! ...யேசுவின் ஈடு இணையற்ற நாமத்தில் ...ங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். ...லாண்டுத் தேர்வுக்கு ஆயத்தமாகிக் கொண் ...ருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஒருவேளை, ...ங்கள் பெற்றோர் கல்வி அறிவு இல்லாமல் ...ல்லது அதிகப் படிப்பு இல்லாமல் இருக்கலாம். ...றாலும் நீங்கள் அவர்களை அசட்டை ...ண்ணாமல் அவர்களுக்குச் செவி கொடுத்தால், ...ச்சயமாய் ஆசீர்வதிக்கப்படுவீர்கள் என்ற ...ண்மையை உணர்ந்து வாழுங்கள்.

"மகனே, காலேப்! மணி ஐந்து ஆகி ...ட்டது, அப்பா, எழுந்து படி! அப்பொழுது ...ான் காலாண்டுத் தேர்வில் அதிக மதிப் ...பெண்கள் பெற முடியும்," என்று அன்போடு ...ழுப்பினார்கள் காலேபின் தாயார்.

"அம்மா! எனக்குத் தெரியும், தயவு ...செய்து என்னைத் தொந்தரவு செய்யாமல் ...ருக்கிறீர்களா? போய், உங்கள் வேலையைப் ...ருங்கள்!" என்று கோபமாகப் பேசின காலேப், ...பார்வையை நன்றாக இழுத்து மூடிக் ...காண்டான்.

இவர்கள் இருவரின் உரையாடலையும் ...வனித்துக்கொண்டிருந்த அவன் தந்தை, ...டய்! காலேப் நான் வேலைக்குப் போகுமுன், ...எழுந்து குளித்து, பள்ளிச் சீருடையை ...அணிந்திருக்கவேண்டும். இல்லையெனில், ...ப்பதே வேறு," என்று கண்டிப்பான குரலில் ...ட்டினார்.

வேண்டா வெறுப்பாகத் தன் படுக்கையைவிட்டு எழுந்த காலேப் தன் காலைக் கடன்களை முடிக்க விரைந்தான். தன் பள்ளிச் சீருடையை அணிந்தவனாக, தன் தகப்பன் முன்வந்து நின்றான்.

திருப்தியுடன் அவனைப் பார்த்த அவன் தகப்பன், "மகனே, காலேப்! ஒழுங்காகப் பள்ளிக்குச் சென்று படிக்க வேண்டும். உன்னை ஒரு பொறியியல் நிபுணனாக்க வேண்டும் என, நான் கற்பனை செய்து வைத்திருக்கிறேன், சரியா" என்று சொல்லி தன் வேலைக்குப் புறப்பட்டார்.

அவர் சொல்வதின் அர்த்தம் புரியாதவனைப்போல அவரையே பார்த்துக் கொண்டிருந்தான் காலேப். அவர் போன பின்பு, அவன் தன் அம்மா கட்டிக்கொடுத்த உணவை எடுத்துக்கொண்டு, பள்ளிக்குச் செல்ல ஆயத்தமானான். ஆனால் பள்ளிக்குச் செல்லாமல் அருகிலுள்ள பூங்காவினுள் நுழைந்தான். அங்கிருந்த ஒரு இருக்கையில் அமர்ந்தான். கடந்த சில வாரங்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி ஒன்று, அவன் மனக்கண்முன் ஒரு படக்காட்சியைப்போல் திரையிடப்பட்டது. அதாவது, அப்போது அங்கு வந்திருந்த சில வாலிபர்களின் பேச்சு அவன் மனதின் கவனத்தை ஈர்த்தது. அவர்கள் படிப்பதினால் பலன் ஒன்றுமில்லை என்றும், அதற்குப் பதிலாக ஒரு தொழில் செய்தால் நல்ல வருமானம் ஈட்டலாம் என்றும், ஒருவருக்கொருவர் ஆலோசனை கூறிக்கொண்டனர். அன்றுமுதல், சாத்தான் காலேபுக்குள் கிரியை செய்யத் துவங்கினான். படிப்பின்மேலுள்ள நாட்டத்தைக் குறைத்தான். பள்ளிக்குச் செல்லும் ஆசை அவனுக்குள் மெள்ள மெள்ளக் குறைந்தது.

காலேபின் அப்பா அப்பகுதியில் சிறந்த மெக்கானிக். பெரிய கடை ஒன்றை அவர் வைத்திருந்தார். அவர் உண்மையும் உத்தமுமாய் செயல்பட்டதால் அநேக வாடிக்கையாளர்கள் அவர் கடையைத் தேடி வருவார்கள். ஆகவே, அவருடைய கடையில் அவருக்கு உதவியாகத் தன்னை வைத்துக்கொள்ளுமாறு காலேப் அவரிடம் கூறினான். அவரோ, அதற்குச் சம்மதியாமல் பள்ளிக்குச் சென்று படிக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்.

இதை ஏற்றுக்கொள்ளமுடியாத நிலையில்தான் காலேப் அன்று பூங்காவிற்குச் சென்றான். சிறிது நேரத்திற்கெல்லாம் பூங்காவின் காவலர் அவனை அவன் தந்தையிடம் ஒப்படைத்தார். கண்ணீர் மல்க நின்ற அவனைக் கண்ட அவன் தந்தை ஆத்திரமடைந்தவராய், "டேய்! ஏன் இப்படிச் செய்கிறாய்? உனக்கு என்ன ஆச்சு?" என்று சொல்லி, அவனை அடிக்கக் கையை ஓங்கினார்.

அதற்குள் அங்கு வந்த வாடிக்கையாளர்களில் ஒருவரான தேவ ஊழியர் எல்லா விஷயங்களையும் கேட்டறிந்தார். காலேபைத் தன் வாகனத்தில் ஏற்றிக்கொண்டார். கண்களில் நீர் மல்க, கோபமும் ஆத்திரமும் உள்ளத்தில் கொண்டவனாய், அமைதியாக அவருடன் சென்றான் காலேப்.

அந்தத் தேவ ஊழியர், "உனக்கு இயேசு அப்பாவைப் பிடிக்குமா, காலேப்?" என்று கேட்டார்.

"ஊம்" என்று தலையைமட்டும் அசைத்தான், காலேப்.

"அப்படியானால் இயேசு அப்பா உனக்குக் கொடுத்தத் தாலந்தை நீ உபயோகிக்கவில்லையே. நீ நன்றாகப் படிக்கும் மாணவன் என்று நினைக்கிறேன். உன் அப்பாவைப் படிக்க வைக்க யாரும் முன்வரவில்லை. நீயோ உன் தகப்பனுக்குச் செவிகொடாமல் தாயையும் அசட்டைபண்ணி, ஏன் பெற்றோரின் விருப்பத்தை அவமதிக்கிறாய்?" *"உன்னைப் பெற்ற தகப்பனு[க்குச்] செவிகொடு; உன் தாய் வயது செ[ன்றவளா]கும்போது அசட்டைபண்ணாதே"* எ[ன்று] நீதிமொழிகள் 23:22 இல் சொல்லப்பட்டிருக்[கிறது].

"நீ இயேசு அப்பாவை நேசி[ப்ப]யானால் அவருடைய வார்த்தைகளுக்குக் கீ[ழ்ப்]படியவேண்டுமே. படிப்பிலே உனக்கு உத[வி] தேவையானால் உடனே என்னைக் கூப்பி[டு]. நான் வந்து உனக்குக் கற்றுத் தருகிறேன். உ[ன்] அப்பாவின் விருப்பப்படி ஒரு பொறியி[யல்] நிபுணராக வந்தால், நீ இன்னும் அதி[க]ம் சம்பாதிக்கலாமே" என்று ஆலோசனை கூறின[ார்].

அமைதியாகக் கேட்டுக் கொண்டு வ[ந்த] காலேப், சிந்திக்கத் தொடங்கினான். அதற்குள் அவனை ஒரு கடைக்கு அழைத்துச் சென்[று] ஐஸ்கிரீம் வாங்கிக்கொடுத்தார் அந்தத் தே[வ] ஊழியர். ஐஸ்கிரீமை சுவைத்தபடியே "அங்கிள்! இனி, இப்படிச் செய்யமாட்டே[ன்]. நான் ஒழுங்காகப் பள்ளிக்குப் போய் படி[த்து] ஒரு பொறியியல் நிபுணனாவேன்" என்[று] உற்சாகமாகக் கூறினான் காலேப். அந்தத் தேவ ஊழியர் அவனை அவன் தந்தையிட[ம்] அழைத்து வந்து, அவரிடம் ஒப்படைத்தார்.

"அப்பா! என்னை மன்னித்துவிடுங்க[ள்]. இனி நான் உங்களை அசட்டைபண்[ண] மாட்டேன்" என்று உறுதி கூறினான் காலே[ப்]. அவனை மகிழ்ச்சியுடன் அரவணைத்து[க்] கொண்டார் அவன் தகப்பன்.

என் அருமைப் பிள்ளைகளே! ஒருவேளை பெற்றோரின் ஆலோசனை[யை]விட உங்கள் நண்பர்கள், அருகிலிருப்போ[ர்] ஆகியோர் கொடுக்கும் ஆலோசனைக[ள்] உங்களுக்கு நன்மை பயக்கும் என்று நீங்[கள்] கருதலாம். எனினும், தேவனுடைய வார்த்[தை]களுக்குக் கீழ்ப்படியுங்கள். *"உன்னைப் பெ[ற்ற] தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வ[யது] சென்றவளாகும்போது அவளை அசட்[டை] பண்ணாதே"* என்ற வசனத்தைக் கை[க்]கொள்ளுங்கள். தேவனுடைய ஆசீர்வாதத்[தை] நிறைவாய்ப் பெற்று அநுபவியுங்கள்.

சாட்சிப்பகுதி

முள்ளில் உதைக்கிறது கடினம்

என் பெயர் சுமதி சாமுவேல். நான் ன்னிரண்டாம் வகுப்பில் படித்துக்கொண் ருந்தபோது, எனது தாயார் இயேசுவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். வைத்தில் வேலை பார்த்துவந்த என் தந்தையாரைத்தவிர, எங்கள் குடும்பத்தினர் அனைவரும் இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பெற்று, மூழ்கி ஞானஸ்நானம் பெற்று, இயேசுவை ஆராதித்து வந்தோம்.

முன்னறிவிப்பின்றி திடீரென ஒருநாள் என் தந்தை எங்கள் இல்லம் வந்துசேர்ந்தார். அவர் ஒருவரோடும் பேசவில்லை. சிறிது நேரத்திற்குப் பின்னர் என்னைத் தனியே அழைத்து, "நீ ஏன் கிறிஸ்தவளானாய்?" என்று கேட்டார்.

அதற்கு நான், கிறிஸ்துவின் வாழ்க்கை என்னைக் கவர்ந்தது என்றும், எவரது கட்டாயமுமின்றி நான் இயேசுவை ஏற்றுக் கொண்டேன் என்றும் கூறினேன். இதுபோன்று என் சகோதரரையும் தனித்தனியே அழைத்துப் பல கேள்விகளைக் கேட்டார். "ஒருவரும் கட்டாயப்படுத்தி எங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவில்லை; இயேசுவே உண்மைத் தெய்வம் என்று நாங்கள் அறிந்ததால்மட்டுமே ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டோம்" என்றோம். இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட பின்பு, எனது வாழ்க்கைமட்டுமல்லாது, எங்கள் குடும்பத்தினர் அனைவரது வாழ்க்கையும் வெற்றி வாழ்க்கையாக மாறிற்று.

என் தகப்பன் கிறிஸ்துவைக்குறித்தும் பெந்தெகொஸ்தே கிறிஸ்தவரைக்குறித்தும் தவறான எண்ணங்கொண்டிருந்தார். குடும்பத்தினர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதற்கு, என் தாயாரே காரணம் என்பதை அறிந்தார். குவைத் வேலையிலிருந்து இந்தியாவின் பாண்டிச்சேரி பகுதிக்கு வந்த பின்னர், வேலை ஏதும் செய்ய வில்லை.

எனது தாயாரையும் பிள்ளைகள் அனைவரையும் கொன்றுவிட்டு, தானும் மரிக்க எண்ணினார். ஆகவே, இரவு நேரங்களில் இருமுறை என் தாயாரின் அறைக்குக் கத்தி யோடு வந்தார். அவர் வந்த நேரங்களி லெல்லாம் என் தாயார் முழங்காலிலிருந்து ஜெபிப்பதைக் கண்ணுற்று, ஏதும் செய்ய இயலாது சென்றுவிட்டார். ஏதோ ஒரு தெய்வீக வல்லமை தன்னைத் தடுத்து நிறுத்துவதையும் அறிந்தார்.

புகைபிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையா யிருந்த என் தந்தை, வீட்டின் முன்னறையி லிருந்து புகை பிடித்துக்கொண்டிருக்கும்போது, வானத்திலிருந்து நெருப்பு ஒன்று பந்தைப் போல தன்னை நோக்கி வந்ததைக் கண்டு, சிகரெட்டைத் தூக்கி எறிந்தார். அந்நெருப்புப் பந்து அவரை விரட்டி, விரட்டி அடித்ததால், தரையிலே விழுந்தார். இவ்வநுபவத்தை அவர் என் தாயாரிடம் பகிர்ந்துகொண்டபோது, அப்போஸ்தலனாகிய பவுலின் அநுபவத்தை என் தாயார் என் தந்தையிடம் விளக்கினார், **"முள்ளில் உதைக்கிறது கடினம்"** என்றும், வேத புத்தகத்திலிருந்து அவ்வசனத்தை எடுத்துச் சுட்டிக்காட்டினார்கள்.

இயேசுவின் வல்லமையை அறிந்தும், அவரைத் தன் இரட்சகராக ஏற்றுக்கொள்ள விரும்பாத என் தந்தை, இருதய நோயினால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர், "இயேசுவே, நீர் என்னை உயிரோடே காத்தால், நான் உமக்கு ஊழியஞ்செய்வேன்" என பொருத்தனை பண்ணினார். சுகம் பெற்றார். அவருக்குக் கர்த்தர் ஆயுசு

நாட்களைக்கூட்டிக்கொடுத்தார். இப்போது, பாண்டிச்சேரியில் ஒரு போதகராகப் பணிபுரிகிறார்.

நானும் எனது பள்ளிப்படிப்பை முடித்து, செவிலியர் (Nurse) பயிற்சி பெற்று, வேலூர், சென்னைப் பட்டினங்களில் வேலை செய்தேன். ஒரு கிறிஸ்தவ சகோதரனை மணம் புரிந்த நான், எனது வேலையை விடுத்தேன். நானும் என் கணவருமாகக் கர்த்தருக்கு ஊழியஞ் செய்து வருகிறோம். எங்கள் குடும்பத்தினரும் கர்த்தரைச் சேவித்து வருகின்றனர். எல்லாத் துதி, கனம், மகிமை இயேசுவுக்கே உரித்தாகட்டும்.

சுமதி சாமுவேல். சென்னை.

சபையின் செய்திகள்

ஆகஸ்டு திங்கள் 7 ஆம் நாள் காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபை ஊழியர்களும் இதன் ஐக்கியத்திலமைந்த ஏனைய சபை ஊழியர்களும் தலைமைச் சபை வளாகத்தில் இணைந்து கூடினர்.

போதகர் தாமஸ்ராஜ் அவர்களின் துதி ஆராதனைக்குப் பின்பு, யாத்திராகமம் 40:33-35 வரையுள்ள வசனங்களை மையமாகக் கொண்டு, "தேவன் கற்பித்தபடி எவ்வாறு ஊழியஞ்செய்யவேண்டும்?" என்றுள்ள தலைப்பில் நான்கு குறிப்புகளைப் பேசினார்.

ஊழியர்கள் தேவனோடு தனித்திருக்க நேரம் செலவிடவேண்டும் (மாற்கு 4:34); அவரிடம் ஐக்கியங்கொள்ளவேண்டும் (1 யோவான் 1:7); நியமிக்கப்பட்ட அரணிலே தரித்திருக்கவேண்டும் (ஆபகூக் 2:1); ஆழ்ந்த பிரதிஷ்டைக்குள்ளாகத் தங்களை அர்ப்பணிக்க வேண்டும் (நியாயாதிபதிகள் 13:8) என்று போதித்தார்.

ஊழியர்களின் அர்ப்பணிப்பு ஜெபத்திற்குப் பின்பு, மதிய உணவு வழங்கப்பட்டு கூட்டம் இனிதே முடிந்தது.

NEWS

புதிய செல்போன் கோபுரங்களுக்குப் புதிய கட்டுப்பாடு

பறவைகள் மற்றும் தேனீக்களுக்கு செல்போன் கோபுரங்களால் பாதிப்பு ஏற்படு வதால், புதிய செல்போன் கோபுரங்கள் அமைக்க கட்டுப்பாடுகள் கொண்டுவருமாறு மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அறிவுரை கூறியுள்ளது.

செல்போன் கோபுரங்களில் இருந்து வெளியாகும் மின்காந்த கதிர்வீச்சால் பறவைகள் மற்றும் தேனீக்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதாக கருதப்படுகிறது. இதுபற்றி ஆராய ஒரு நிபுணர் குழுவை மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகம் அமைத்தது. அக்குழு, செல்போன் கோபுரங் களால் பறவைகள் மற்றும் தேனீக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக அறிக்கை சமர்ப்பித்தது.

அதில், ஏற்கனவே உள்ள செல்போன் கோபுரங்களில் இருந்து ஒரு கி.மீ. சுற்றள வுக்குள் புதிய செல்போன் கோபுரங்கள் அமைக்க அனுமதி வழங்கவேண்டாம் என்று அறிவுரை கூறியுள்ளது. மேலும், செல்போன் கோபுரங்களில் இருந்து வெளியாகும் மின்காந்த கதிர்வீச்சால் வன உயிரினங்கள் மோசமாக பாதிக்கப்படுகின்றன. எனவே, புதிய செல்போன் கோபுரங்கள் அமைக்கும்போது, மிகுந்த கவனத் துடனும், பறவைகள் பறக்கும் பாதைக்கு இடையூறு இல்லாமலும், கதிர்வீச்சு அளவை அதிகரிக்காத வகையிலும் முன்னெச்சரிக்கை யுடன் அமைக்கவேண்டும். செல்போன் கோபுர வசதியைச் செல்போன் சேவை நிறுவனங்கள் பகிர்ந்துகொள்வதைக் கட்டாயம் ஆக்கினால் புதிய செல்போன் கோபுர தேவையை குறைத்துவிடலாம். மின்காந்த கதிர்வீச்சின் பாதிப்பு அளவைக் குறைப்பது அவசர அவசியம். அதைச் செய்யும்வரை கடுமையான விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று கூறியுள்ளது. (தினத்தந்தி 10-08-2012)

Hitherto

When the soul in much discouraged
By the roughness of the way,
And the cross we have to carry
Seems heavier everyday;
When some cloud that overshadows
Hides our Father's face from view,
Oh, 'tis well then to remember,
He has blessed us hitherto!

> Looking back the long years over
> With a varied path—and yet,
> All the way His hand has led us
> Past each hindrance we have met;
> Giv'n to us the pleasant places,
> Cheered us all the journey through;
> Passing through the deepest waters
> He has blessed us hitherto!

Surely, then our souls should trust Him,
Tho' the clouds be dark o'er head.



Reg.Number TN/CCN/385/2012-2014. Licence to the post under WPP No.TN/CCN/85/2012-20
Reg. Under Regis. of News Paper for India No.1295/57. Posting date 29th & 30th of every mon
Date of Publication: Monthly, 15th of every month.
Posted at RMS/1 Patrika Channel, Egmore, Chennai - 600 008.

Book - Rs.5/-

1. விசுவாசிகளின் சாட்சிகள்
2. அதிசயமான தேவ கிருபை
3. உத்தம சாட்சிகள்
4. இரயில் நிலையத்தில் இயேசு என்னைக் குணமாக்கினார்
5. இயேசு செய்த அற்புதங்கள் (சாட்சிகள்)
6. ஆவிக்குரிய வேத சத்தியங்கள்
7. தசமபாகம் கர்த்தருக்கு உரியன
8. Jesus met me in jail
9. Tithe belongs to the Lord
10. Spiritual truths from the Bible
11. My experiences

Book - Rs.10/-

12. கிறிஸ்துமஸ் செய்திகள்
13. எனது அனுபவங்கள்
14. இயேசு உயிர்த்தெழுந்தார்
15. நீதியின் சூரியன்
16. பரதேசிகளாகிய நாம்
17. நித்திய பிரதான ஆசாரியர்
18. சபை சபைதானா?
19. ஜீவனுள்ள சாட்சிகள்
20. அற்புத சாட்சிகள்
21. சாட்சிகள்
22. நன்றியுள்ள சாட்சிகள்
23. கல்லூரியில் அற்புதங்கள்
24. நற்செய்தி கதைகள்
25. தீப ஒளி
26. அந்தக் கடிதங்கள்
27. அந்த மயில்கள்
28. கனமான ஊழியம்
29. வெளிச்சம்
30. ஆத்தும நேசர்
31. கொடி
32. கர்த்தருடைய பிள்ளைகள் அனுதினம் அறிக்கை செய்யவேண்டியவை
33. நீரே என் மேய்ப்பர்
34. தேவ ஊழியம்
35. எனது அநுபவங்கள்
36. Eternal grace
37. The Star
38. The new year
39. Spiritual questions
40. The timely warning
41. The blessing
42. Your response to the Cross
43. Springs in the valley
44. A narrow escape from hell

Book - Rs.15/-

45. இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாவோம்
46. இயேசு கூறின உவமைகள்

Book - Rs.20/-

47. வாக்குத்தத்தச் செய்திகள் 2004
48. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம்-2
49. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம்-4
50. ஆவிக்குரிய கிறிஸ்தவர்களின் வாழ்க்கை
51. நம்மை ஆசீர்வதித்து நடத்துகிற கர்த்தர்
52. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள்-1
53. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள்-2
54. ஒருவருக்கொருவர்
55. கர்த்தருக்குப் பரிசுத்தம்
56. Successful ministers of the Lord
57. Messages of God's blessings-Part 1
58. Messages of God's blessings-Part 2

Book - Rs.25/-

59. வாக்குத்தத்தச் செய்திகள்
60. வாக்குத்தத்தச் செய்திகள்
61. வாக்குத்தத்தச் செய்திகள்
62. வாக்குத்தத்தச் செய்திகள்
63. வாக்குத்தத்தச் செய்திகள்
64. வாக்குத்தத்தச் செய்திகள்
65. வேத ஒழுங்கின்படி தேவ
66. வேத ஒழுங்கின்படி தேவ
67. வேத ஒழுங்கின்படி தேவ
68. தேவனுடைய ஆசீர்வாத... பெற்றுக்கொள்ளுங்கள்
69. கிறிஸ்துமஸ் செய்திகள் (
70. A good soldier of Jesus C

Book-Rs.30/-

71. ஜெபத்தின் வல்லமை
72. நல்ல போர்ச்சேவகன்
73. ஆவிக்குரிய தேவசெய்தி
74. வேதாகமத்திலிருந்து எடு... முத்துக்கள் (பகுதி-1)
75. Gleanings from the Bible
76. வேதாகமத்திலிருந்து எடு... முத்துக்கள் (பகுதி-2)
77. Gleanings from the Bible
78. வாக்குத்தத்தச் செய்தி
79. கிறிஸ்துவின் சிலுவை ... மற்றும் உயிர்த்தெழுத
80. வேத ஒழுங்கின்படி தேவ
81. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்

Book-Rs.100

82. உன்னதப்பாட்டு (வேதபா
83. வெளிப்படுத்தின விசேஷம்
84. The Revelation (Bible Stu
85. விடுதலைத் தூதன் ஆண் (ஜனவரி முதல் டிசம்பர்

Herald of Deliverance
Edited and published by Pastor M.K.Sam Sundaram on behalf of ACA Literature Ministry
111, Brick kiln Road, Purasawalkam, Chennai -600007.
Phone: 26622775 Website: www.acalivechurch.org
Administrative office: ACA Literature Ministry, Post Box No.3504, Chennai -600007.
Phone: 26622021 e-mail: acalm@acalivechurch.org
Printed by :Devadas, Lord Printers, 71/A Gangaiamman Koil Street, Vadapalani, Chennai -600 026. Phone: 24728885/Cell:9841429079